விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 15 வியாழக்கிழமை (28.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## தமிழ் மக்கள் பேரவையின்

# தீர்வுத்திட்ட வரைபு நேற்று இந்தியாவிடம் கையளிப்பு

## துணைத் தூதுவர் நடராஜன் பெற்றுக் கொண்டார்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட இறுதி முன்மொழிபு இந்திய மத்திய அரசிடம் கையளிக்கும் பொருட்டு நேற்றைய தினம் இந்திய துணைத் தூதுவர் ஆர்.நடராஜனிடம் கையளிக்கப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க....

## கிணற்றினுள் வீழ்ந்த சகோதரியை மீட்பதற்காக தமக்கை குதிப்பு

### போராடி மீட்ட போதும் சகோதரி மரணம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் கிணற்றினுள் தவறிவிழுந்த சிறுமியை மீட்பதற்காக சிறுமியின் தமக்கையார் கிணற்றினுள் குதித்து சகோதரியை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சையளித்த போதிலும் சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றுமுன் தினம் பிற்பகல் 2 மணியளவில் ஊர்காவற்றுறை நாரந்தனை மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

அணைக்கட்டில்லாத கிணற்றை கடக்க முயன்ற 7 வயதுடைய றீகன் சியாமினி எனும் சிறுமி கிணற்றினுள் தவறி விழுந்துள்ளார்.


24ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு இலங்கையரான எனக்கு உரிமை உண்டு!

### இராணுவ முகாம் சர்ச்சையில் சம்பந்தன் ஆவேசம்

(கொழும்பு)

நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றும் உரிமை எனக்கும் உள்ளது. ஏன் என்றால் நான் இந்நாட்டு குடிமகன். எனினும் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்று என்னால் கூறமுடியாது. அவ்வாறு நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற



முடியும் என்று நினைத்தால் அதற்கான உரிமையும் எனக்கும் உள்ளது. நான் இலங்கையன் எனும் போது ஏன் முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பலவந்தமாக இராணுவ முகாமுக்குள்

24ஆம் பக்கம் பார்க்க....

## வெள்ளை வானில் வந்தவர்களால் இரு குடும்பஸ்தர்கள் கடத்தப்பட்டனர்

### வடமராட்சி பகுதியில் நேற்று பதற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கட்டைக்காடு முள்ளியான் பகுதியை சேர்ந்தவர்களான ஜோர்ஜ் ராஜநாயகம் (வயது 42) மற்றும் வீ.மைக்கல் (வயது 45) ஆகிய இருவரும் நேற்று மதியம் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டு உள்ளனர். மேற்படி வெள்ளை வான் கடத்தலினால் அப்பகுதியில் நேற்றைய தினம் பெரும் பதற்றம் நிலவியதோடு இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் கடற்தொழில் செய்து வருவதாகவும் நேற்றைய தினம் தொழில் நடவடிக்கைக்காக கடற்கரைக்கு சென்ற வேளை வெள்ளை வானில் வந்தோர்களால் கடத்தப்பட்டுள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். மேற்குறித்த இருவரும் குடும்பஸ்தர்கள் எனவும் எதற்காக கடத்தப்பட்டார்கள் எனத் தெரியாமல் உள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வெள்ளை வான் கடத்தல்

24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகள் கைது; ஆராய்வதாக ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவது தொடர்பாக அறிந்து, நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார். அச்சு மற்றும் இலத்திரனியல ஊடகங்களின் தலைவர்கள், பிரதம ஆசிரியர்களுடன் ஜனாதிபதி



மாளிகையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற சந்திப்பிலே ஜனாதிபதி

24ஆம் பக்கம் பார்க்க....

## வி.எஸ்.சிவகரன் நேற்றுக் கைது



(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணிச் செயலாளரும் மன்னாரிலிருந்து வெளிவரும் புதியவன்

24ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தன் தமிழர் என்பதாலேயே இனவாதிகள் இலக்கு வைக்கின்றனர்


### இராணுவ முகாம் சர்ச்சைக்கு விக்கிரமபாகு விளக்கம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சிங்கள இனத்தவராக இருந்திருந்தால் இராணுவ முகாமுக்குள் சென்றமை தொடர்பில் எவரும் வாய் திறந்திருக்க மாட்டார்கள். நாட்டுக்குள் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கு இனவாதிகளே இதனை பூதாகரமாக்கி வருகின்றனர் என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

சம்பந்தன் இராணுவ முகாமுக்குள் சென்றது தவறாக இருந்தால் அவரை முகாமுக்குள் அனுமதித்த இராணுவத்தினரையே இடைநிறுத்தியிருக்க வேண்டும் எனவும் அவர குறிப்பிட்டார். அதிகாரத்தை பகிர்

24ஆம் பக்கம் பார்க்க....



தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தனியார் பேருந்து மோதியதில் தந்தையும் மகளும் படுகாயம்

(சாவகச்சேரி)

முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முற்பட்டவேளை கட்டுப்பாட்டை இழந்த தனியார் பேருந்து எதிரே வந்த துவிச்சக்கரவண்டியுடன் நேருக்கு நேரே மோதுண்டதில் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்த தந்தையும் மகளும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் தரம் 6-ல் கல்வி கற்கும் மீசாலை மேற்கினை சேர்ந்த அருட்குமரன் அபிசா (வயது 10) மற்றும் அவரது தந்தையான சதாசிவம் அருட்குமரன் (வயது 40) என்ற இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

பாடசாலை முடிந்து வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே மேற்படி விபத்தில் தந்தையும் மகளும் சிக்குண்டுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்,

விபத்தினை ஏற்படுத்திய தனியார் பேருந்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் தப்பித்துச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ-30-89)


## தேசிய லொத்தர் வெல்லப்பட்டுள்ளது

26.04.2016 அன்று இடம்பெற்ற நிரோதா லொத்தர் சீட்டிழுப்பில் 10 லட்ச ரூபாய் முதற்பரிசு யாழ்ப்பாணத்தில் வெற்றி பெறப் பெற்றுள்ளது. இவ் லொத்தர் கனகலிங்கம் முகவர் ஊடாக விநியோகம் செய்து விற்பனை செய்யப்பட்டது.

நீங்களும் இன்றே கனகலிங்கம் முகவர் லொத்தர் கூடுகளை இனங்கண்டு லொத்தர்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

கனகலிங்கம் திலகவதி
லொத்தர் முகவர் நிலையம்,
யாழ்ப்பாணம். (4319)



## பாராட்டி வாழ்த்து



கிளி/மாவட்ட சாயி சமிர்த்தி
உப தலைவரும்
கரைச்சிப் பிரதேச
செயலாளருமான திருவாளர்
**கோபாலபிள்ளை நாகேஸ்வரன்**
அவர்கள் அண்மையில் சாமஶ்ரீ
தேசமானிபட்டம் பெற்றதையிட்டு
மனநிறைவுடன் வாழ்த்துவதுடன் இவர்
மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று
நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்
சாமஶ்ரீ இராமசாமி புவனேஸ்வரன்
(சமாதான நீதவான் கிளிநொச்சி) (C-4450)

## மரண அறிவித்தல்



### A.V.அருணகிரிநாதன்

(சிரேஷ்ட சட்டத்தரணி, பதில் நீதிவான் - வவுனியா)

யாழ்ப்பாணம் அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் தாவடியில் வசித்தவரும், தற்போது வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய அம்பலவாணர் வேலுப்பிள்ளை அருணகிரிநாதன் நேற்று முன்தினம் (26.04.2016) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதிகளின் மருமகனும், கெசலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், திலீபன் (இலங்கை வங்கி - காங்கேசன்துறை), திலீப்குமார் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), திலீப்காந்தன் (இலங்கை சட்டக்கல்லூரி), அச்சுதன், அனந்தன் (பேராதனை பல்கலைக்கழகம்), ஆரணி (யாழ்ப்பாணம் - உயர் தொழில்நுட்பக் கல்லூரி), அனந்தகோமகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகா (ஆசிரியர் - திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் வித்தியாலயம்) அவர்களின் மாமனாரும், சுகந்தியின் அன்புப் பேரனும், மகாதேவி (அராலி), காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் கனகலிங்கம் (பொறியியலாளர்), சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற முகாமையாளர் - சங்கானை ப.நோ.கூ சங்கம்), குமரகுரு (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்), சிவசுந்தரம் (ஓய்வுநிலை அதிபர்), சிவனருள்தேவி (ஓய்வுநிலை உப அதிபர் - D.S.சேனநாயக்க கல்லூரி, கொழும்பு), குகராஜா (கணக்காளர்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் தனலட்சுமி (லண்டன்), மகாலக்சுமி (தாவடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியா குட்செட் வீதி, முதலாம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (28.04.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக வவுனியா தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, வவுனியா. (4321)

தகவல் :
குடும்பத்தினர்.

077 691 7523, 077 236 3516

# சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருப்போர் கைது செய்யப்படுவர்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வைத்திருப்போரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் முன்னெடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத துப்பாக்கிகளை மீள ஒப்படைக்கும் நடவடிக்கைகள் இதுவரை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஆயுதங்களை மீள ஒப்படைக்கும் செயற்பாடுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

துப்பாக்கிகளை மீள ஒப்படைக்கும் நபர்களுக்கு 5ஆயிரம் ரூபாய் தொடக்கம் 25ஆயிரம் ரூபாய் பணத்தொகை வழங்கப்படுகின்றது.

சட்டவிரோத துப்பாக்கிகளை பொலிஸ நிலையங்களிலும் பிரதேச செயலாளர் அலுவலகம் அல்லது மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும் எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஹொரணை, போருவதன்ட பகுதியில் நேற்று துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் ஆடை தொழிற்சாலை ஒன்றில் தொழில் புரியும் ஊழியர் ஒருவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருப்போரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கொழும்பு குற்ற தடுப்பு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (செ-12)

# இராணுவ வீரரை விசாரணை செய்யுங்கள்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம ஒன்றிற்குள் அனுமதியின்றிச் சென்றதாக கூறப்படும் விவகாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனை மட்டும் விமர்சிப்பதில் அர்த்தமில்லை. சம்பந்தனை இராணுவ முகாமிற்குள் அனுமதித்த சிப்பாயிடத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப்பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-12)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 30.03.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் கந்தவனம் வள்ளிநாச்சி**

**************************

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 29.04.2016 வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

\- குடும்பத்தினர்

மாவடி வளவு,
நவிண்டில்,
கரணவாய் வடக்கு.

(C-4449)

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் வேண்டிக் கொள்கிறோம்

## கண்ணீர் அஞ்சலி

யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை ஆசிரியை திருமதி சிவதர்சினி காண்டீபன் அவர்களின் அன்புத் தந்தையார்



**முருகேசு சிவராசா**

அவர்கள் 25.04.2016 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யாழ். சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை, சுழிபுரம்.

(சி-4451)

# கொக்கு வேட்டை! ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மிருசுவில் பகுதியில் இரைதேடி வந்த வெளிநாட்டு கொக்குகளை வேட்டையாடிய நபர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்து கொக்குகளை வேட்டையாடி இறைச்சிகளை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்றபோதே 33 வயதுடைய குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# தமிழன் என்பதாலா தடை?

## அமைச்சர் ராஜித கேள்வி

(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஒரு தமிழன் என்பதாலா இராணுவ முகாம்களுக்குள் செல்லத் தடையாகவுள்ளது? என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ன கேள்வி எழுப்பியுள்ளார்.**



தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர்:


சாதாரணமாக நாங்களும் இராணுவ முகாம்களுக்குள் சென்றுள்ளோம். உறங்கியும் இருக்கின்றோம். அப்பொழுது எல்லாம்மௌனம் காத்த இவர்கள் சம்பந்தன் சென்றதை மட்டும் ஏன் இவ்வாறு பெரிதுபடுத்துகிறார்கள் எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் சம்பந்தன் அப்பிரதேசத்தில் இருக்கும் ஒருவர். அவர் அப்பிரதேசத்தால் செல்லும் போது அங்கு சென்றிருப்பார். சம்பந்தன் போனது பிரபாகரன் போனதுபோல் ஆகிவிடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல்; ராணுவ மேஜரிடமும் விசாரணை

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றி வரும் இராணுவ மேஜர் ஒருவரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.



புலனாய்வுப் பிரிவின் முன்னிலையில் நாளை ஆஜராகி வாக்கு மூலம் அளிக்குமாறு ஹோமாகம நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்க இந்த உத்தரவினை நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார்.

குறித்த மேஜர் கடந்த 2010ம் ஆண்டு ஜனவரி மாதம் மின்னேரிய இராணுவ முகாமில் கடமையாற்றியுள்ளார்.

எக்னெலிகொட மின்னேரிய முகாமிற்கு அழைத்துச் சென்றமை தொடர்பில் இந்த இராணுவ மேஜரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

எக்னெலிகொட கடத்தல் தொடர்பில் குறித்த மேஜரிடம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென புலனாய்வு பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேகர நீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த மேஜரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

ஏற்கனவே பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் சில இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களை எதிர் வரும் 10ம் திகதி வரையில் விளக்க மறியலில் தடுத்து வைக்குமாறு நீதவான் நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளார்.(இ-5)

## யோஷிதவின் வழக்கு முடிந்தால் மீண்டும் வழக்குத் தொடரப்படும்

**இராணுவ ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு**

தற்போது நடைபெற்று வரும் யோஷிதவின் வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் கடற்படை தரப்பில் யோசித மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணைகள் நடைபெறும் என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது யோஷித மீது இரண்டு வழக்குகள் பற்றியே விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

ஒன்று யோசித கடற்படையில் இணைவதற்கான தகுதிகள் அவருக்கு இருந்தனவா என்பது தொடர்பிலும். மற்றையது கடற்படையில் இணைந்த பின்னர் அவர் மேற்கொண்ட சட்டரீதியற்ற வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் குறித்த விசாரணைகள் ஆகும்.

இதுபற்றிய விசாரணைகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் யோசித கடற்படை தரப்பிலான விசாரணைகளுக்கும்முகங்கொடுக்கவேண்டிவரும் என இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடற்படையில் இணைவதற்கான தகுதிகள் ஏதும் இல்லாத யோசிதவை ஏற்றுக்கொண்டமைக்கான காரணம் என்ன? என பிரிகேடியர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் யோசித இராணுவ பயிற்சி பெறும் காலப்பகுதியில் அவருடன் பயிற்சி பெற்ற சக பயிற்சியாளர்கள் மீது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் இது பற்றிய விசாரணைகளும் யோசித மீது மேற்கொள்ளப்படும் எனவும் இதன்போது இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார். (இ-5)

## மின்நிலையத்தை இரத்துச் செய்யும் பிரேரணை முன்வைக்கப்படவில்லை

**கிழக்கு மாகாண சபை அமர்வில்**

சம்பூர் நிலக்கரி மின்நிலையம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என கிழக்கு மாகாண சபையில்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கு.நாகேஸ்வரனால் சமர்ப்பிக்கப்படவிருந்த பிரேரணை சமர்ப்பிக்கப்படவில்லை.

கிழக்கு மாகாண சபையின் அமர்வு, தவிசாளர் சந்திரதாச கலபதி தலைமையில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்குக் கூடியது. சபை அமர்வுக்கு, ஆளுங்கட்சி சார்பாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினரான அன்வர், குச்சவெளி பிரதேசத்திற்கான தனியான கல்வி வலயத்தை உருவாக்குதல் தொடர்பிலான பிரேரணையைச் சமர்ப்பிக்கவிருந்தார். அவர், நேற்று முன்தினம் அவைக்கு சமூகமளிக்காமையால், அப்பிரேரணை எடுத்துக்கொள்ளப்படவில்லை.

எதிர்க்கட்சி சார்பாக, முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உட்பட மூன்று உறுப்பினர்கள் மாத்திரமே பிரசன்னமாகியிருந்தனர். இந்த நிலையில், 37 உறுப்பினர்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் கோரமின்மையால், அவையமர்வை சந்திரதாச கலபதி, ஒரு மணிநேரம் ஒத்திவைத்தார்.

இதனையடுத்து, சபை மறு காலை 10.40க்கு ஆரம்பமானது. அதன்பின்னரே, பிரேரணைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

கிழக்கு மாகாண சபையின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 12 பிரேரணைகள் முன்வைக்கப்படவிருந்தன. அதில், சம்பூர் நிலக்கரி மின் நிலையம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற பிரேரணை சமர்ப்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## போதைக்காக மாத்திரைகளை உட்கொண்ட மூன்று மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

போதைக்காக ஒருவித மாத்திரையை உட்கொண்ட 3 மாணவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

பதுளை நகரில் உள்ள பிரபலமான கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்களே இவ்வாறு பதுளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்கள் 10ம் தரத்தில் கல்வி கற்பவர்கள் என பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-6)

## சம்பிக்கவின் வாகனம் மோதி விபத்து; சி.சி.ரிவி காணொலிகள் விசாரணைக்கு

இராஜகிரிய பிரதேசத்தில் அமைச்சர் பாட்டலி சம்பிக்கவின் வாகனத்தில் இளைஞர் ஒருவர் மோதி காயமடைந்த சம்பவத்தில் பதிவான சீ.சீ.ரி.வி காணொலிகளையும், 5இறுவெட்டுக்களையும் பரிசோதனையின் பொருட்டு மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு நீதிமன்ற நீதவான் சந்தன கலங்சூரிய நேற்றைய தினம்விடுத்துள்ளார்.

இந்த பரிசோதனையின் அறிக்கைகள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டபின்னர் அமைச்சர் சம்பிக்கவை கைது செய்வதா?இல்லையா? என நீதிமன்றம் முடிவுஎடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விபத்துடன் தொடர்புடைய ஜீப் வண்டியினை சோதனை செய்த போது அதில் கையடக்கத் தொலைபேசி ஒன்று காணப்பட்டதாகவும், அது அமைச்சர் சம்பிக்கவின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் நேற்றைய தினம் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்த வழக்கு மீதான விசாரணை ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதவான் அறிவித்துள்ளார். (இ-5)

## வட்டுக்கோட்டைப் பகுதியில் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

(உரும்பிராய்)

வட்டுக்கோட்டையில் குடும்பஸ்தர் ஒருவர் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகி காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.40 மணியளவில் வட்டுக்கோட்டை அராலிதெற்கு உடையார் வீதியிலுள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, பாலசுப்பிரமணியம் பாலச்சந்திரன் (வயது-36) என்னும் 2 பிள்ளைகளின் தந்தையான இவர் ஒப்பந்த அடிப்படையில் கட்டட வேலை செய்து வருகிறார்.

மேலும் சம்பவ தினமன்று இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 இனந்தெரியாத நபர்கள் கட்டட வேலை செய்பவர் நீ தானா? என்று கேட்டுக் கேட்டு, கொண்டு வந்த கத்திகள், கைக்கோடரி, வாள்களால் அவரை வெட்டிக் காயப்படுத்திவிட்டு ஓடித்தப்பிவிட்டார்கள். கைகள், கால்களில் வெட்டுக் காயத்துடன் அக் குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மேற்படி சம்பவத்தையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-3)

# பரபரப்பான இறுதி ஓவரில் டெல்லியை வென்றது குஜராத்

பரபரப்பான இறுதி ஓவரில் டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் குஜராத் லயன்ஸ் அணி ஒரு ஓட்டத்தால் திரில் வெற்றி பெற்றது.

நேற்று புதுடெல்லியில் நடைபெற்ற ஐ.பி.எல். லீக் போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியும், குஜராத் லயன்ஸ் அணியும் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணியின் கப்டன் ஜாகீர் கான் முதலில் பந்துவீச முடிவு செய்தார். நேற்றைய போட்டியில் டெல்லி அணி மூன்று ஸ்பின்னர்களுடன் களமிறங்கியது. குஜராத் அணியில் பிஞ்ச்க்கு பதிலாக போல்க்னர் சேர்க்கப்படிருந்தார்.

குஜராத் அணியின் மக்கல்லமும், ஸ்மித்தும் தொடக்க ஆட்டகாரர்களாக களமிறங்கினார்கள். இருவரும் அதிரடியாக ஆடியதால் அந்த அணியின் ஓட்ட வேகம் ஜெட் வேகத்தில் உயர்ந்தது. டெல்லி அணி இரண்டு வேகப்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கியதால், ஸ்பின்னர்களை அதிகம் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது.

மக்கல்லம் 27 பந்துகளில் அரை சதம் அடித்தார். ஸ்மித் 26 பந்துகளில் அரை சதம் அடித்தார். இந்த ஜோடி 54 பந்துகளில் 100 ஓட்டங்கள் குவித்தது. இந்த ஆபத்தான ஜோடியை இம்ரான் தாகீர் பிரித்தார். 11வது ஓவரில் ஸ்மித் (53) தாகிர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். 12-வது ஓவரில் மோரிஸ் பந்தில் மக்கல்லம் (60) கிளீன் போல்ட் ஆனார்.


இதன் பிறகு களமிறங்கிய ரெய்னா (2), கார்த்திக் (19),ஜடேஜா (4), இஷாத் கிஷான் (4) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் குஜராத் அணியின் ஓட்டவேகம் குறைந்தது. இறுதியில் அந்த அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்கள் எடுத்தது. டெல்லி தரப்பில் தாகீர் 3 விக்கெட்களையும், மோரிஸ் 2 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள்.

இதையடுத்து 173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணி,

20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 171 ஓட்டங்கள் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அதிரடியாக கலக்கிய கிறிஸ் மோரிஸ் ஆட்டமிழக்காமல் 32 பந்துகளில் 82 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்து வீச்சில் குல்கர்னி 3 விக்கெட்டினை கைப்பற்றினார். (க)



# இன்னும் 5 வருடங்கள் கிரிக்கெட் விளையாட முடியும்

## தோனி தெரிவிப்பு



ஐதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் புனே அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பந்துவீச்சாளர்களுக்கு தோனி பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஐதராபாத்தில் நேற்று முன்தினம் நடந்த இந்த லீக் ஆட்டத்தில் புனே அணி 'டக்வொர்த்-லூயிஸ்' விதிப்படி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதல் போட்டியில் மும்பை அணியை வீழ்த்திய பிறகு தற்போது 6-வதுஆட்டத்தில் புனே அணி 2-வது வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றி குறித்து அந்த அணியின் தலைவர் தோனி கூறுகையில், இந்த வெற்றி எங்களுக்கு மிகவும் முக்கியமானது. மழை நாங்கள் எதிர்பாராத ஒன்று.ஆனால் மழையால் நாங்கள் வெற்றி பெறவில்லை.

ஆடுகளம் பந்துவீச்சுக்கு ஏற்ற வகையில் இருந்ததால் முதலில் பந்துவீசவே முடிவு செய்து இருந்தோம். எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாக வீசினார்கள்.

அனைத்து பந்து வீச்சாளர்களும் நேர்த்தியுடன் வீசினார்கள். அஸ்வின் பந்துவீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. எங்களது களத்தடுப்பும் நன்றாக அமைந்தது என்று கூறியுள்ளார்.

மேலும், இன்னும் 10 வருடத்திற்கு கிரிக்கெட் விளையாட விரும்புகிறீர்களா என்ற நிருபரின் கேள்விக்கு பதிலளித்த டோனி, 10 வருடங்கள் விளையாட முடியும் என்று நினைக்கவில்லை. ஆனால் 5 வருடங்கள் ஆடினாலே சிறப்பானதாக இருக்கும் என்று கூறியுள்ளார். (க)

# நடன அழகிகளுக்கு தொல்லை உமர் அக்மல் மீது நடவடிக்கை

நடன அழகிகளை மீண்டும் ஆட சொல்லி தொல்லை கொடுத்த பாகிஸ்தான் வீரர்கள் உமர் அக்மல், பிலாவால் ஆகியோருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் இருபது-20 ஓவர் உலக கோப்பைப் போட்டியில் ஆடிய உமர் அக்மல், கடந்த ஆண்டு ஐதராபாத்தில் நடன நிகழ்ச்சியில் பங்கேற்று பொலிஸில் சிக்கினார். இந்நிலையில் பாகிஸ்தானில் உள்ளூர் போட்டி ஒன்றில் பங்கேற்ற இவர்,சக வீரர்களான பிலாவால், முகமது நவாஸ், ஓவைஸ் ஷா, சாகித் யூசுப் ஆகியோருடன் நடன நிகழ்ச்சியை பார்க்க சென்றுள்ளார்.

அப்போது ஒரு குறிப்பிட்ட பாடலுக்கு மீண்டும் ஆடும்படி நடன அழகிகளை அவர்கள் வற்புறுத்தியுள்ளனர். ஆனால் இதற்கு நிர்வாகம் மறுப்பு தெரிவித்த நிலையில், அவர்களுடன் வீரர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இந்த



சம்பவம் பாகிஸ்தான் தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்டது. இதனால் அந்த வீரர்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வீரர்கள் மீது எழுந்துள்ள இந்த புகார் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (க)

# மும்பை இந்தியன்ஸ் அணியில் ஜெரோம் டெய்லர் இணைவு

மும்பை இந்தியன்ஸ் அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளர் மலிங்க காயம் காரணமாக விலகியதையடுத்து அவருக்கு பதிலாக ஜெரோம் டெய்லர் சேர்க்கப்பட்டுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பல வெற்றிகளுக்கு முக்கிய காரணமாக விளங்கியவர் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க. இவர் நீண்ட நாட்களாக முழங்கால் காயம் காரணமாக அவதிப்பட்டு வருகிறார்.

சமீபத்தில் முடிவடைந்த இருபது-20 உலகக் கோப்பை போட்டியிலும் அவர் விளையாடவில்லை. காயம் குணமடைந்து மும்பை அணிக்காக விளையாடுவார் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில், மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சியடையாததை அடுத்து ஐ.பி.எல். தொடரில் இருந்து அவர் விலகிவிட்டார்.

இந்நிலையில் பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள அறிக்கையில், காயம் அடைந்த மலிங்கவிற்கு பதிலாக மும்பை அணியில் மேற்கிந்திய தீவு வேகப்பந்து வீச்சாளர் ஜெரோம் டெய்லரை சேர்க்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)




## இன்றைய போட்டிகள்

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நியூட்டன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொவின்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன. (க)

# பாகிஸ்தான் நாட்டின் குடிமகனாக சம்பியன் டேரன் சமி அறிவிப்பு

மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமிக்கு கௌரவக் குடியுரிமை வழங்க பாகிஸ்தான் அரசு முன் வந்துள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்காக 2 முறை இருபது-20 உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்த டேரன் சமி, பாகிஸ்தான் உள்ளூர் அணியான பெஷாவர் ஜால்மி அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் பாகிஸ்தான் ரசிகர்களிடையே மிகவும் பிரபலமான வீரராக உள்ள சமிக்கு கௌரவக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று பெஷாவர் அணியின் உரிமையாளர் ஜாவேத் அப்ரிடி டுவிட்டர் மூலம் கோரிக்கை விடுத்தார்.



இதற்கு பதில் அளித்த பாகிஸ்தான் கைபர் பதுன்க்வா மாகாண முதலமைச்சர் பெர்வெய்ஸ் கட்டாக், டேரன் சமிக்கு கௌரவ குடியுரிமை வழங்குவதில் பெருமை கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார். (க)

## கண்ணீர் அஞ்சலி



**சிவபாக்கியம்-கணபதிப்பிள்ளை**

எமது பாடசாலை அதிபர் திரு. கணபதிப்பிள்ளை-சுந்தரலிங்கம் அவர்களின் தாயார் திருமதி சிவபாக்கியம்- கணபதிப்பிள்ளை அவர்கள் 24.04.2016 அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(4303)

ஆசிரியர்கள், மாணவர்கள் (யா/ காரை வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்.




## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 01 . 1948



இறப்பு 27 . 04 . 2016

செல்வி.

### ஞானகலாராணி (ராணி) கணபதிப்பிள்ளை
(இணுவில்)

இணுவில் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை (இராசா விதானையார்) இரத்தினம்மா தம்பதிகளின் இளைய புதல்வி ஞானகலாராணி 27.04.2016 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி,நல்லையா மற்றும் அருந்தவமலர்,சுசீலாதேவி,காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் சர்வானந்தா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான காசிநாதன், சுப்பிரமணியசிவம் மற்றும் தர்மலிங்கம்,கமலா, திருமகள், சாந்தினி ஆகியோரின் மைத்துனியும் ரதி, ரஞ்சி,பாமா,கலா,ராஜ்குமார், சுரேஷ்குமார், சுபாஜினி,சுதாரினி,சுதர்ஜினி,சுதாஹரன் ஆகியோரது சிறியதாயும் அனுஷா,கிரிஜா, சாரங்கி, சயந்த், லஷ்மி ஆகியோரது மாமியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல்(28.04.2016) இன்று வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3மணிக்கு நடைபெறும் ஈமக்கிரியைகளைத் தொடர்ந்து மாலை 5மணிக்கு பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் தெற்கு
இணுவில்

(4448)

தகவல்
திருமதி. அ. சுப்பிரமணியசிவம்

# இழுத்துமூடும் நிலைக்கு வந்துள்ளது கொழும்பு கோட்டை மிதக்கும் சந்தை

## வாடிக்கையாளர்கள் செல்லாததனால்

வாடிக்கையாளர்கள் பொருட்களை வாங்குவதற்குச் செல்லாததனால் கொழும்பு புகையிரத நிலையப் பகுதி யில் அமைந்துள்ளமிதக்கும்சந்தை வெறிச்சோடிக் காணப்படுகிறது. கொழும்பு புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள நீரோடையில் அமைக்கப்பட்ட இந்த மிதக் கும் சந்தையில் சுமார் 100 கடைகள் வரை காணப்ப டுகின்றன. வாடிக்கையாளர்கள் அங்கு செல்லாததனால் விற்பனையாளர்கள் நாள் முழுக்க தூங்கி வழிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் சிறிய விற்பனை பிரதேசம், சுற்றுலாப் பயணிகளைச் கவரும் இடம் மற்றும் மிதக்கும் சந்தை என்பன தற்போது கைவிடப்பட்டுள்ளன.

மேற்படி மிதக்கும் சந்தையை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை பெரும் கடன் சுமையை சுமக்கவேண்டியுள்ளது.

மிதக்கும் சந்தையில் ஒரு படகுக்கு 18 ஆயிரம் ரூபா வாடகை அறவிடப்படுகிறது. இதனை நான்கு விற்பனையாளர்கள் பகிர்ந்து கொள்கின்றனர். இதைத்தவிர ஏனைய ஒவ்வொரு விற்பனையாளர்களும் தமது மாதாந்த வரு மானத்திலிருந்து 4 ஆயிரத்து 500 ரூபா வாடகையாக செலுத்த வேண்டியுள்ளது.

மனிங் மாக்கெட்டில் அவர்கள் ஈட்டிய வருமானத்தி லும் மிகவும் குறைந்தளவு தொகையையே இங்கு பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அவர்கள் பஸ்ரியன் வீதியில் அமைந்துள்ள தமது முன்னைய விற்பனை பகுதிக்குச் செல்ல நேரிட்டுள்ளது.

இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் பெர்னாண்டோ தெரிவிக்கையில், தற்போது மிதக்கும் சந்தைக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை சீர் செய்வதற்கு என்ன செய்யமுடியும் என்பது குறித்து ஆராய வேண்டியுள்ளது.

விற்பனையாளர்களை வேறொரு பிரதேசத்தில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்பிரகாரம் புதிய கடைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிதக்கும் சந்தைக்கான மாதாந்த வாடகையைக் குறைப்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. மேற்படி மிதக்கும் சந்தையை அமைப்பதற்கும்வடிகாலமைப்புவேலைகளுக்கும் ஒரு பில்லியன் ரூபா வரை செலவா கியுள்ளது.

மிதக்கும் சந்தை (Floating Market) விற்பனையாளர் சங்கத் தலைவர் எச்.எம். பி. சில்வா தெரிவிக்கையில்,

விற்பனையாளர்களை மீண்டும் பஸ்ரியன் வீதியில் அமைந்துள்ள சந்தையில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு கோரிக்கை விடுத்துள்ளோம்.

மேற்படி மிதக்கும் சந்தையின் எதிர்காலம் அரசாங்கத்தின் கைகளி லேயே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (3)

## பெயர் மாற்றம்

கொம்புச் சந்தி வீதி பெரிய கல்லாறு 01 கல்லாறு மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்ட எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் அரியநாயகம் சிறிமங்களராஜா என பதியப்பட்டுள்ளது. ஏனைய ஆவணங்களில் அரியநாயகம் ரவி என்றே பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் அரியநாயகம் ரவி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
அரியநாயகம் ரவி

(4316)

## இராசி பலன்

28.04.2016
(சித்திரை 15, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சஷ்டி மாலை 5.37 மணிவரை
பூராடம் பிற்பகல் 5.46 மணிவரை
சுபநேரம் 7.28-8.58 மணிவரை
இராகுகாலம் 1.28-2.58 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி, சுக் புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம், திருவாதிரை பகல் 12.00 இற்கு மகர-சந் | | |
| | | | குரு ராகு |
| சந் | சனி செவ் | | |

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய் பொருட் சேர்க்கையுண்டு.

**மேடம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்** அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**கும்பம்** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** ஆழ்ந்த சிந்தையுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும் நாள், தொழிலை மேம்படுத்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

# கைது செய்யப்பட்டவர்கள் குறித்து யாழில் ஆறு முறைப்பாடுகள் பதிவு

## யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இந்த மாதத்தில் இதுவரை 6 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் வடபிராந்திய பணிப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி மறவன் புலவு பகுதியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவத் திற்கு பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட் டவர்கள் தொடர்பாக அவர்க ளது உறவினர்களால் எமது அலுவலகத்தில் முறைப்பாடு கள் பதிவு செய்யப்படுகின் றன.

அந்த வகையில் இச்சம் பவம் தொடர்பாக கைதுசெய் யப்பட்டவர்கள் தொடர்பில் இந்த மாதத்தில் இதுவரை எம்மிடம் 6 முறைப்பா டுகள் பதிவு செய்யப்பட்டு ள்ளன.

மானிப்பாய், நீர்வேலி, கட்டப்பிராய், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்து முறைப்பாடுகள் பதிவு செய் யப்பட்டுள்ளன.

எமக்கு கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்கு தெரியப்ப டுத்த வேண்டும் என எமக்கு வழங்கப்பட்டுள்ள அறிவித்த லுக்கமைய குறித்த சம்பவம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்காக கொழும்பில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்துக்கு உடன டியாக அறிவித்து வருகி றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக் களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் இணைந்து நடத்தும் ஊன முற்றவர்களின் அரச கலை விழாவிற்காக நடனம், இசைக் கருவிகள் இசைத் தல், பாட்டு, பறைசாற்றுதல், ஓவியம் மற்றும் நாடகம் ஆகிய போட்டி களுக்கான விண்ணப்பங்கள் கலாசார அலுவல்கள் திணைக்க ளத்தி னால் கோரப்பட்டுள்ளன.

எனவே தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவி னைச் சேர்ந்த போட்டியாளர் கள் அதற்கான விண் ணப்பப் படிவத்தை தெல்லிப்பழை பிரதேச செயலகக் கலாசாரப் பிரி வில் பெற்று நாளை மறுதினம் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படை க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பிரதேச செயலாளர் அறி வித்துள்ளார். (இ)

## மேதின எழுச்சி நிகழ்வு

தமிழ் தேசிய மக்கள் முன் னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இணைந்து கூட்டாக நடத்தும் மேதின எழுச்சி நிகழ்வு எதிர்வரும் மேமாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை யில் அமைந்துள்ள சிவன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இதில் தாயகம்,தேசியம் , சுய நிர்ணய உரிமை அடிப்ப டையில் தமிழ் தேசத்தின் அங்கீகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலை, காணாமல் போனோரை கண்டறி தலை வலியுறுத்தியும் தமிழ் தொழிலாளர்கள், தமிழ் விவ சாயிகள், தமிழ் மீனவர்கள் ஒடுக்குமுறையில் இருந்து விடுப டல் காணி அபகரிப்பை தடுத்தல் மீள் குடியேற்றத்தை வலியுறு த்தல், இராணுவ மயமாக்கலை தடுத்தல், பயங்கரவாத சட்டத் தின்கீழ் கைது களைநிறுத்தல், கொடிய பயங்கர வாத தடை சட்ட த்தை நீக்குமாறு வலியுறுத்தல் என்பவற்றிற்காக அனைத்து தமிழ் மக்களையும் இம் மேதினத்தில் அணிதிரளு மாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. (இ-9)

## ஒன்று திரள்வோம்

தரமான கல்வியை வழங்கு வதற்கு அர்ப்பணிப்பான சேவை செய்யும் அனைத்து தமிழ்பேசும் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மே.1 தொழிலாளர்தின வாழ்த் துக்க ளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காங்கேசன்துறை வீதியில் உள்ள இணுவில் மத்திய கல்லூரி முன்பாக ஒன்றுகூடி ஆரம்ப மாகும் மேதினப் பேரணியிலும், அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மேதி னக் கூட்டத்திலும் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களையும், கல் விப்புலம் சார்ந்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு இலங் கைத் தமிழர் ஆசிரியர் அழைப்பு விடுத்துள்ளது. (இ)

## புலிகளின் சிறப்பு தளபதி நகுலன் கைது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலி கள் அமைப்பின் சாள்ஸ் அன் ரனி படைப்பிரிவின் சிறப்பு தளபதியான நகுலன் என அழைக்கப்படும் கண பதிப்பி ள்ளை சிவமூர்த்தி என்பவர் புனர்வாழ்வின் பின்னர் விடு விக்கப்பட்ட நிலையில் பயங் கர வாத குற்றத்தடுப்பு பிரிவி னரால் கைது செய்யப்ப ட்டமை தொடர்பில் அவரது மனைவியால் மனிதவு ரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிரா ந்திய காரியாலயத்தில் முறை ப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முன்னாள் தமி ழீழ விடுதலைப்புலி உறுப்பி னர் நேற்று முன்தினம் காலை நீர்வேலி தெற்கு பகுதியில் உள்ள அவருடைய வீட்டி லிருந்து பயங்கரவாத குற்றத் தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப் பட்டிருந்தார். 2009 ஆம் ஆண்டு போர் நிறைவ டைந்த பின்னர் காணாமல் போயிருந்த சில தளபதிக ளில் இவரும் ஒருவர் என கூறப்பட்டிருந்த நிலையில் நீர்வேலி பகுதியில் கடந்த சில வருடங்க ளுக்கு முன் இவர் திருமணம் முடித்தி ருந்தார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் முற்பகல் 10 மணிக்கு சிவில் உடையில் நீர்வேலி கந்தசாமி கோவி லடி நீர்வேலி தெற்கு என் னும் முகவரியிலுள்ள இவரு டைய இல்லத்திற்குச் சென்ற பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் கணபதி ப்பிள்ளை சிவமூர்த்தி என்ற இயற் பெயர் கொண்ட நகுலன் என்ற முன்னாள் விடுத லைப் புலிகளின் தளபதியை கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் தனது கண வன் காரணம் எதுவும் கூறப்ப டாத நிலை யில் கைது செய் யப்பட்டமை தொடர் பில் அவ ரது மனைவி நேற்றைய தினம் மனிதவுரிமை ஆணைக்கு ழுவின் யாழ்.பிராந்திய காரி யாலய த்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய் துள்ளார்.

குறித்த நபர் ஒரு பிள்ளை யின் தந்தை எனவும் கூறப் படுகின்றது. போர் முடிவுற்று பல வருடங்களின் பின்னர் இவ்வாறன கைதுகள் தொட ர்வதனால் முன்னாள் போரா ளிகளிடையே கடும் பதற்ற நிலை தோன்றியிருப்பதோடு, நல்லாட்சி அரசு என கூறிக் கொள்ளும் இந்த அரசின் மீதும் அவநம்பிக்கை ஏற்பட ஆரம்பித்து உள்ளமை குறிப் பிடத்தக்கது. மேலும் வெளி நாடுகளில் இருந்து இல ங்கை திரும்பும் புலம்பெயர் தமிழர் களை தற்போது நாடு திரும்ப வேண்டாம் என கூட் டமைப் பின் பாராளுமன்ற உறுப் பினர்கள் கோரியுள்ளமை யும் குறிப்பிடத்தக்கது. (இ-4)

## மேதின நிகழ்வுகள்

புதிய ஜனநாயக மாக்சிச லெனி னிசக் கட்சியின் புரட்சிகர மேதின நிகழ்வுகள் வலி.கிழக்கு புத்தூரில் இடம்பெற இருக்கின்றன. மே தினத்தன்று பி.ப. 3.30 மணிக்கு பருத்தித்துறை வீதி ஆவரங்கால் சந்தியிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகும்.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதி, சுன்னாகம் வீதி வழி யாக பேரணி கலைமதி விளையாட்டு மைதானத்தை வந்த டைந்து அங்கு கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் கா. செல் வம் கதிர்காமநாதன் தலைமையில் மேதினக் கூட்டம் நடை பெறும்.இக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் பிரதான உரையாற்றுவார்.

மேலும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களான சட்டத்தரணி சோ.தேவராஜா, க.தணிகாசலம், புதிய ஜனநாயக இளைஞர் முன்ன ணியின் த.ஸ்ரீபிரகாஸ், ச.குமார், மு.மயூரன் ஆகியோரும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ச.தனுஜன், விவசாய அமைப்பின் பொ.முருகேசு, தொழிற் சங்கத்தின் கா.பஞ்சலிங்கம், பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் க.வாகினி, கு.ஜெனிற்ரா ஆகியோரும் உரை யாற்றுவர். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-5)



வடமாகாண கிராம அபிவருததததிணைககளததால,உடுவல பரதேச செயலகபபரிவல நடததபபடும மகளிர அபிவருததி நிலையததின தையல மறறும அழகயல பயறசி நிலையததல பயறசியை முடிதத மாணவிகளின தையல மறறும அழகயல பொருடகளின கணகாடசி கடநத திஙகடகிழமை உடுவல உதவபபரதேச செயலாளர செலவி .செ.அகலயா தலைமையல இணுவல சிவகாமயமமன கோயல மணடபததல இடமபெறறது. இநநிகழவல வடமாகாணசபை உறுபபினர பா.கஜதபன பரதம விருநதினரகாகக கலநதுகொணடு நாடாவை வெடடி கணகாடசியைத திறநது வைதது , கணகாடசியைப பாரவையிடடார. மாகாணசபை உறுபபினருடன உடுவல பரதேச செயலாளர நநதகோபாலன, யாழ.மாவடட கிராம அபிவருததி உததியோகததர நா.பஞசலிஙகம, உடுவல பரதேச செயலக கிராம அபிவருததி உததியோகததர உமாபாலன, சஙகானை பரதேச செயலக கிராம அபிவருததி உததியோகததர சாநதலிஙகம ஆகியோரும கலநதுகொணடனர. நிகழவல பயறசியை முடிதத மாணவிகளுககான சானறிதழகள வழஙகி வைககபபடடன. மாணவிகள, போதனாசிரியர எனப்பெருமளவானோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (படங்கள்: கிஷோர்)

# விமல் போன்ற ஒட்டுண்ணிகளே மகிந்தவின் வீழ்ச்சிக்கு காரணம்

## வடக்கு ஆளுநர் குரே குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷவின் வீழ்ச்சிக்கு சோதிடர்களும், உறவினர்கள் மற்றும் விமல் வீரவன்ச போன்ற ஒட்டுண்ணிகளுமே காரணம் என்று வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.**

சிலாபம் பிரதேசத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் ஒன்று கூடல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ பொருளாதாரத்தை சீர்குலைப்பதாக வும், ஊழல் மோசடிகளில் தொடர்புபட்டிருப்பதாகவும் முதலில் குற்றம் சாட்டியவர் விமல் வீரவன்சதான்.

ஆனால் அவரைத் தான் மகிந்த ராஜபக்ஷ மிகச்சிறந்த பேச்சாற்றல் கொண்டவராக மதித்துக் கொண்டிருந்தார். அதன் காரணமாக உண்மையான பேச்சாற்றல் கொண்ட நாங்கள் கட்சிக்குள் மதிக்கப்படாத நிலையில் செயற்பட நேர்ந்தது.

மகிந்தவின் தோல்விக்கு ஒருவருடம் முன்னதாகவே நான் அவரிடம் அது குறித்து எச்சரிக்கை செய்தேன. ஆனால் அவர் அதனை பொருட்படுத்தவில்லை.

சோதிடர்களை நம்பினார். உறவினர்களை முன்னுரிமைப்படுத்தினார்.

விமல் வீரவன்ச போன்ற ஒட்டுண்ணிகளுக்கு முக்கியதுவம் கொடுத்தார்.

அதன் விளைவாக தோலவியுற்று அதிகாரத்தை இழந்துள்ளார்.

மகிந்தவின் காலத்தில் அவரது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே செயற்பட்டது. ஆனால் இப்போது மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்த சுதந்திரக் கட்சி அரசாங்கம் செயற்படுகின்றது.

இது குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாகும். என்னை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேரடியாகவே அழைப்பு விடுத்தார்கள்.

எனினும் நான் அதனை நிராகரித்து விட்டேன். சுதந்திர கட்சியிலேயே தொடர்ந்தும் நிலைத்திருப்பேன். இதேபோன்று இன்னும் ஓரிரு வருடங்களுக்குள்ளாக சுதந்திரக் கட்சியினரை மட்டும் கொண்ட அரசாங்கம் ஒன்றை நாங்கள் மீண்டும் உருவாக்கிக் கொள்வோம் என்றும் ரெஜினோலட் குரே தொடர்ந்தும் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# உயிரிழந்த ஊடகவியலாளர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு நாளை யாழில்

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் உன்னதமான ஊடக சுதந்திரத்திற்காக உயிர் கொடுத்த ஊடகவியலாளர்களிற்கான பொது நினைவு நாள் நினைவேந்தலும் அமரர் தராகி சிவராமின் 11ஆம் ஆண்டு நினைவு நாளும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.பொதுநூலக மண்டபத்தில் மறைந்த ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில் நடைபெறும்.

மேலும் படுகொலையான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களது குடும்பங்களிற்கான உதவித் திட்டங்கள், வீடமைப்பு திட்ட அறிவிப்பு என்பனவும் இடம் பெறவுள்ளது. (இ-5)

# கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் நிகழ்வு நல்லூரில்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் எனும் நிகழ்வு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை 30 ஆம் திகதி மாலை 5.30மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையுரையாற்றவுள்ளார்.பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ,கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவர்களாக விளங்கும் விவாத அரங்கும் நடைபெறும்.

இன்றைய சூழ்நிலையில் நம் மக்களை பெரிதும் நெறிசெய்ய வல்லவர்கள் அரசியல் வாதிகளே! என இரா.செல்வவடிவேலும் சமய வாதிகளே! என ந.விஜயசுந்தரமும் இலக்கிய வாதிகளே! என கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனும் வாதிடவுள்ளனர். (இ

# 4-வது தடவையாக இலங்கை வந்த போதே பாகிஸ்தான் பிரஜை ஹெரோயினுடன் கைது

87 மில்லியன் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைதான பாகிஸ்தான் பிரஜை நான்காவது தடவையாகவே இலங்கை வந்துள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சுமார் எட்டரை கோடி ரூபாய பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் இலங்கைக்குள் பிரவேசிக்க முயற்சித்த போது கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினர், குறித்த பாகிஸ்தான் பிரஜையை கைது செய்திருந்தனர்.

இதற்கு முன்னர் மூன்று தடவைகள் தாம் இலங்கைக்கு வந்துள்ளதாக குறித்த பாகிஸ்தானியர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

இறுதியாக கடந்த 7ஆம் திகதியும் அவர் இலங்கை வந்து சென்றுள்ளார்.

கொழும்பின் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் அவர் அறையொன்றையும் இம்முறை ஒதுக்கியிருந்தமை தெரியவந்துள்ளது.

இலங்கையில் எவரையும் தெரியாது எனவும் பாகிஸ்தானின் முன்னணி போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் இந்தப் போதைப்பொருளை இலங்கைக்கு எடுத்துச் செல்லுமாறு கோரியதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்காக தமக்கு இரண்டு லட்சம் ரூபாய் பணம் வழங்க அந்த வர்த்தகர் இணங்கியிருந்தார் என பாகிஸ்தானியர் குறிப்பிட்டுள்ளார்.

நட்சத்திர ஹோட்டலில் தங்கயிருக்குமாறும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பொதியை யாருக்கு கொடுக்க வேண்டுமென பின்னர் அறிவுறுத்துவதாகவும் பாகிஸ்தானின் முன்னணி போதைப் பொருள் வர்த்தகர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட போது பாகிஸ்தானியர் எந்தவிதமான பதற்றத்தையும் காட்டவில்லை எனவும் சந்தோசமாகவே விசாரணைகளை எதிர்கொண்டதாகவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி இந்த பாகிஸ்தான் பிரஜை கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

தரம்-5 மாணவர்களுக்கான


# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-08

பகுதி-I

## தமிழ்க் கல்விக் கழகம்

விடைகள்

(27.04.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 11) | 4 | 21) | 1 | 31) | 3 |
| 2) | 4 | 12) | 1 | 22) | 4 | 32) | 1 |
| 3) | 3 | 13) | 2 | 23) | 2 | 33) | 4 |
| 4) | 3 | 14) | 3 | 24) | 3 | 34) | 64 |
| 5) | 1 | 15) | 1 | 25) | 3 | 35) | ரூ.650.00 |
| 6) | 3 | 16) | 3 | 26) | 1 | 36) | ரூ.600.00 |
| 7) | 2 | 17) | 1 | 27) | 3 | 37) | நீ பாடசாலைக்கு சென்றாய் |
| 8) | 3 | 18) | 2 | 28) | 3 | 38) |  |
| 9) | 2 | 19) | 2 | 29) | 3 | 39) | தவம் |
| 10) | 2 | 20) | 2 | 30) | 3 | 40) | தேயிலை |

# சிந்தனைக்கூட உரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம் இன்றுவெள்ளிக்கிழமைமாலை 4 மணிக்கு 121, இரண்டாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ளசிந்தனைக் கூட கேட்போர் கூடத்தில் உரையாடல் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. புலம்பெயர் தமிழர் அன்றும் இன்றும் (வேர்களும் கிளைகளும்) எனும்தலைப்பிலானஉரையை வண.பிதா பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 38<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4271 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 6 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc/அரசதொழில்<br>தொ.இ: G/5114 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 12<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/4278 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5125 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 50 செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/4280 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 13<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில் : BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: G/5136 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 42சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BScQS/சொந்த தொழில்<br>தொ.இ: B/4281 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 21 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5138 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# முன்னாள் போராளிகளைக் கொழும்புக்கு அழைப்பது மே தினத்துக்கான ஆட்சேர்ப்பா?

## முன்னாள் எம்.பி. வினோ கேள்வி

முன்னாள் போராளிகளுக்கு உதவித் திட்டம் வழங்குவதாக கொழும்புக்கு அழைப்பது மே தினத்துக்கான ஆட்சேர்ப்பா என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோதராதலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை கொழும்புக்கு அழைத்திருப்பது போராளிகள் மத்தியில் அச்சத்தையும், சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. முன்னாள் போராளிகள் கடத்தப்படுவதும், விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவதும் தொடர்கதையாகவே இருந்து வருகின்றது.

அரசாங்கம் முன்னாள் போராளிகளை பாதுகாக்கும் என்றோ.வாழ்வை மேம்படுத்தும் என்றோ, அன்றாடம் எதிர்நோக்கும் சவால்களை தீர்த்துவைக்கும் என்றோ நம்ப அவர்கள் தயாரில்லை.

எனவே வடகிழக்கில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை முன்னாள் போராளிகளின் பொருளாதார, வாழ்வாதார, புனர்வாழ்வு திட்டங்களுக்கு முழு மையாக ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட விவாதத்திலும் நான் இக்கோரிக்கையை முன்வைத்தேன். குறைந்தது மூன்று வருடங்களுக்காவது இத்திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதித்தால் போராளிகள் பலரின் வாழ்வில் மாற்றங்களை கொண்டு வர முடியும். அது மட்டுமல்லாமல் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் தத்தம் நாடுகளில் வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும்.

முன்னாள் போராளிகளை எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்புக்கு அழைத்து நிற்பதில் இன்னுமொரு சந்தேகத்தினையும் கொண்டு வரச் செய்கின்றது. மறு நாள் முதலாம் திகதி மே தின ஊர்வலத்தில், கூட்டத்தில் போராளிகளை கலந்து கொள்ளச் செய்து கூட்ட எண்ணிக்கையை அதிகரிக்கச்செய்ய புனர்வாழ்வு அலுவலகம் பின்னணியில் செயற்படுகின்றதாவெனவும் சந்தேகப்பட வேண்டியுள்ளது.

மேதின நாளைத் தெரிவு செய்து உதவித் திட்டம் வழங்கும் கலந்துரையாடலை மாவட்ட மட்டத்தில் நடத்தி போக்குவரத்து மற்றும் இதர செலவுகளை தவிர்க்க ஏன் புனர்வாழ்வு அலுவலகம் ஏற்பாடு செய்யக் கூடாது.

போராளிகளை அச்சமூட்டி மேதினக் கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வது அரசாங்கத்தின் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-4-281)






தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வாவின் 39 ஆவது சிரார்த்த தினம் நேற்று முன்தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது. வவுனியா தமிழரசுக் கட்சி கிளையின் ஏற்பாட்டில் வவுனியா, மணிக்கூட்டு சந்தியில் உள்ள தந்தை செல்வநாயகத்தின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. முன்னதாக தூய ஆவியானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன், தமிழரசுக் கட்சியின் தாயகம் அலுவலகத்தில் நினைவுப் பேருரை நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ மற்றும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-குருமன்காடு, பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)

### க.பொ.த (சா/த)பரீட்சையில் சித்தியடைந்த

# 10மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் இன்று அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன

இலங்கைக்கு முதன் முதலாக ஒலிம்பியாட் பதக்கத்தைப் பெற்றுத்தந்த நா. எதிர்வீரசிங்கத்தினால் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பின்தங்கிய பாடசாலைகளான மு/ கோட்டைகட்டிய குளம் அ.த.க பாடசாலை, மு/ ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளில் இருந்து கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த 10 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு இன்று வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மு/ ஐயங்கன் குளம் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

மேற்படி பின்தங்கிய இரு பாடசாலைகளிலும் இருந்து நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்துள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 10 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதில் மு/ கோட்டை கட்டிய குளம் அ.த.க. பாடசாலை மாணவர்கள் ஐந்து பேருக்கும் மு/ஐயங்கன் குளம் அ.த.க. பாடசாலை மாணவர்கள் ஐந்து பேருக்குமாக மொத்தம் 10 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன. (2-3-15)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லை.மாவட்ட சம்மேளன தெரிவு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நடப்பாண்டிற்குரிய இளைஞர் கழக சம்மேளனத் தெரிவு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் கு.யசோதரன் தலைமையில் நடைபெறுமென தேசிய இளைஞர் சேவை மன்றத்தின மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் செயலாளரும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியுமான மா.சசிகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலக பிரிவுகளிலும் இயங்கி வருகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் கழக சம்மேளனத்தில் உள்ள நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் தலா ஆறு பேர் வீதம் 36 உறுப்பினர்கள் பங்குகொண்டு முல்லைத்தீவு மாவட்டத்திற்கான இளைஞர் கழக சம்மேளத்தினை தெரிவு செய்யவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடக்கு மாகாண பணிப்பாளர் எம்.பி.சரத்சந்திரபாலா, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட அதிகாரி திருமதி கே.சரோஜா மற்றும் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் எனஅவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-3-15)

### பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த

# தனியார் பேருந்து பாலத் தடுப்பை உடைத்து 10 அடி ஆழத்தினுள் வீழ்ந்து தடம்புரண்டது

## 15 பயணிகள் வைத்தியசாலையில்



(மல்லாவி)

பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்று ஏ-9 வீதியில் மாங்குளத்திற்கும் கொல்லர் புளியங் குளத்திற்கும் இடைப்பட்ட வீதிப்பாலத்தைஅண்மித்தவேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து அமைக்கப்பட்டிருந்த தடுப்பை உடைத்துக் கொண்டு 10 அடி ஆழப் பள்ளத்தில் வீழ்ந்து தடம்புரண்டது. இவ்விபத்தில் ஊவா பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 15பயணிகள் காயம் அடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மேற்படி பாலத்தடியில் இடம் பெற்றது.



இதில் மல்லாவியை சேர்ந்த யேசுதானந்தன் அபிதாசினி (வயது-21), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைரட்ணம் லவண்யா(வயது-22), கிளிநொச்சியைச் சேர்ந்த தவராசா நர்மிதா(வயது-21), சாவகச்சேரியை சேர்ந்த பாலசுப்பிரமணியம் நிரோஜன்(வயது-21), ஊர்காவற்றுறை புளியங்கூடலைச்சேர்ந்த விக்னேஸ்வரன் விதுஜன் (வயது-21),யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதிமாறன் எழிலினி (வயது-22), வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த மகாதேவன் சாளினி (வயது-21), ஏழாலை மேற்கை சேர்ந்த சந்திரதேவா தனுசிகா (வயது-21), கந்தர்மடத்தைச் சேர்ந்த கிருபானந்தன் சயா (வயது-22), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவபால சற்குணம் கௌசிகா (வயது-20), பரமலிங்கம் மயூரி (வயது-23), அளவெட்டியைச் சேர்ந்த சட்டநாதன் தரன்யா (வயது-21), மீசாலையைச் சேர்ந்த சண்முகம் நிரூஜன் (வயது-22), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைரெட்ணம் அபிலாசினி(வயது-22)ஆகியோரே காயம் அடைந்தவர்களாவர்.

இவர்களில் மேலதிக சிகிச்சைக்காக மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து சாவகச்சேரியைச் சேர்ந்த பாநிரோஜன் என்பவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக சம்பவ இடத்திற்கு சென்ற மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (2-3-15-281)

# கிளிநொச்சியில் மூன்றாம் நாள் அமர்வு




காணாமற் போனோரைத் தேடிக்கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான சாட்சிய விசாரணைகளைப் பதிவு செய்யும் அமர்வுகள் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று வியாழக்கிழமையுடன் நிறைவு பெறுகின்றது. இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை8.30மணிக்குஆரம்பமானமூன்றாம்நாள்அமர்வின் சாட்சி விசாரணைகளைப் பதிவு செய்வதற்காக கண்டாவளைச்சேர்ந்த 250 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

## முள்ளிவாய்க்கால் நினைவுதினம் இம்முறை வவுனியாவில் அனுஷ்டிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வவுனியா தாயக அலுவலகத்தில் வைத்தே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை இம்முறை அனைத்து மக்களையும் ஒன்றுதிரட்டி உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதுடன் இது தொடர்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடப்பட்டு சிறப்பான முறை யில் ஏற்பாடு செய்யப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வவுனியா கலைமகள் விளையாட்டு மைதானத்தில் மே மாதம் 18ஆம் திகதி மாலை 4 மணிக்கு அனுஷ்டிக்கப்படவுள்ளதுடன் அன்று காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மதஸ்தலங்களிலும் யுத்தத்தில் இறந்த அனைத்து மக்களுக்காகவும் விசேட பிரார்த்தனைகளையும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், பொது அமைப்புகள், ஏனைய கட்சிகள் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் கலந்துகொண்டு யுத்தத்தில் இறந்த அனைவருக்காகவும் பிரார்த்தனையில் ஈடுபட கலைமகள் விளையாட்டு மைதானத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (2-281)

## சுகாதார துறையின் அபிவிருத்திக்கு 4,000 மில்லியன் வழங்குவதற்கு மத்திய சுகாதார அமைச்சு இணக்கம்


### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தின் சுகாதார துறையின் அபிவிருத்திக்கு 4,000 மில்லியன் ரூபாய் வழங்குவதற்கு மத்திய சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற மத்திய சுகாதா அமைச்சர் ராஜித சேனாரத்தினவுடனான சந்திப்பின் போதே இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சரின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 25ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற மாதாந்த மாகாண சுகாதார அமைச்சர்களுக்கான மாநாட்டில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் பல்வேறு திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. இதில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவையை மேம்படுத்தும் முகமாக சுகாதார துறைசார்ந்த உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள், வைத்தியசாலைகளை தரமுயர்த்தல், மாகாண அமைச்சின் ஐந்தாண்டு திட்ட நடைமுறை, ஆளணி அதிகரிப்பு போன்ற திட்ட முன்மொழிவுகள் மாகாண சுகாதார அமைச்சினால் முன்வைக்கப்பட்டன.

இதில் குறிப்பாக மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கான குழந்தை மருத்துவ பிரிவு அமைத்தல், வவுனியா பொது வைத்தியசாலையில் இருதய நோய்களுக்கான சிகிச்சை பிரிவினை விரிவுபடுத்தல், யாழ்ப்பாணத்தில் பிராந்திய சுகாதார பயிற்சி நிலையம் நிறுவுதல், வவுனியாவில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய தாதியர் பயிற்சிக்கல்லூரி அமைத்தல், சாவகச்சேரி வைத்தியசாலையில் பாரிசவாத நோயாளர்களுக்கான விசேட நரம்பியல் பிரிவினை அமைத்தல், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கான மருத்துவ விடுதி அமைத்தல், பருத்தித்துறை தள வைத்தியசாலையில் உளநல மருத்துவ பிரிவுக்கான விடுதி அமைத்தல் போன்ற திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் ஒஸ்ரிய நாட்டின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தின் வைத்தியசாலைகளின் உட்கட்டுமான வசதிகள்மேலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் இது தொடர்பான ஒஸ்ரிய நாட்டு அமைப்புகளுடனான உத்தியோகபூர்வ சந்திப்பு அடுத்தவாரம் நடைபெறவுள்ளதாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-250-281)




## இராணுவத்துக்கான காணி அளவீட்டை எதிர்த்து புதுக்குடியிருப்பில் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் உள்ள 30 ஏக்கருக்கருக்கு மேலான48பேரின்காணிகளை அளவிடுவதற்கு வருகை தந்த நில அளவையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரின்எதிர்ப்பை அடுத்து திரும்பிச் சென்றனர்.

தமது பூர்வீக நிலங்களை அதிகாரிகள் இராணுவத்திற்கு தாரை வார்ப்பதாக தெரிவித்து நேற்றுக்காலை 8 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக பிரதேச செயலக வாயிலை மறித்து உண்ணாவிரதப் போராட்டத்திலீடுபட்டனர். இருப்பினும் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பிரதேச செயலகத்திற்கு செல்ல அனுமதித்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் போது காணி அளவிடுவதற்காக வருகை தந்த நில அளவையாளர்களை இராணுவ முகாம் வாசலிற்கு சென்று தடுத்து நிறுத்தினர். மக்கள் பிரதிநிதிகளுடன் மக்கள் உள்நுழைய போகிறார்கள் என அச்சம் கொண்ட இராணுவத்தினர் கதவை இழுத்துப் பூட்டினர்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன்.வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் காணி உரிமையாளர்களின் கடும் எதிர்ப்பால் நில அளவையாளர்கள்அந்தபணியை விட்டு திரும்பி சென்றனர்.

இருப்பினும் இராணுவ புலனாய்வாளர்களும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இவற்றையும் பொருட்படுத்தாது மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர். அவர்களை திருப்பியனுப்பி விட்டு பிரதேச செயலகவளாகத்தில்உண்ணாவிரதத்திலீடுபட்டனர்.

அதன்பின்னர் மக்கள் பிரதிநிதிகள், பிரதேச மக்கள் ஆகியோர் இணைந்து பிரதேச செயலாளரை சந்தித்து கலந்துரையாடி அவர் வழங்கிய உறுதி மொழியின் அடிப்படையில் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர்.

சுமார் நான்கு மணித்தியாலம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வளாகம் பதற்றமாக காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (2-3-281)

## எவ்வித சட்டவிரோத தொழில்களையும் செய்யமாட்டோம் அவர்கள் என்ன செய்தாலும் எமக்கு ஆட்சேபனை இல்லை

### முல்லை. மீனவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் சுட்டிக்காட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவையும் திருகோணமலையையும் பிரிக்கும் கொக்கிளாய் களப்புப்பகுதியில் ஏற்கனவே தடைசெய்யப்பட்ட முறையிலான கடற்றொழிலுக்கு ஆறுமாத கால அனுமதியை அண்மையில் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களப் பணிப்பாளர் வழங்கியிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ,கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் முன்னெடுத்திருந்தனர்.



போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முல்லை.மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கு மகஜர் கையளித்தனர்.

முதலமைச்சருக்கான மகஜரை வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனிடம் வழங்கினர்.

பிற்பகல் ஐந்து மணிக்கு அரசாங்க அதிபர், பொலிஸார், கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர், திருகோணமலை கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் ஆகியோர் வருகை தந்து பார்வையிட்டு உரிய தீர்வொன்றை பெற்றுத் தருவதாகவழங்கப்பட்ட உறுதி மொழியை அடுத்து தமது போராட்டத்தை கைவிட்டுச் சென்றனர்.

அளிக்கப்பட்ட உறுதி மொழிக்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடி 1984 ஆம் ஆண்டு வரைபடத்திற்கமைவாக இரண்டு மாவட்டத்திற்குமான எல்லையைக் காட்டி அவரவர் பகுதிகளில் அவரவரை தொழிலிலீடுபடுமாறு தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த மக்கள்தாம் இதனை மனப்பூர்வமாக ஏற்பதாகவும் தாம் எந்தவித சட்டவிரோத தொழில்களையும் செய்ய மாட்டோம் எனவும் அவர்களுடைய பகுதியில் அவர்கள் என்ன செய்தாலும் தமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்தனர். (2-3-281)



# பாராளுமன்றமே முடிவெடுக்கும்

## வடமாகாண சபை தீர்மானம் குறித்து கல்வி அமைச்சர் காரியவசம் கருத்து

(கொழும்பு)

**வடமாகாண சபை எத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றினாலும் பாராளுமன்றமே அது தொடர்பில் தீர்மானமெடுக்கும என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

வட மாகாண சபையின் தீர்மானத்தை வைத்துக்கொண்டு சிலர் தமது குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிப்பதாகத் தெரிவித்த அமைச்சர், பிரிவினைவாதத்துக்கோ, நாட்டைப் பிளவு படுத்தவோ இடமளிக்க முடியாது என்றும் இவ்விடயத்தை அரசாங்கம் மிக அவதானத்துடனேயே கையாளும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் அனைத்து இன, மத மக்களினதும் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றும் பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள்ளேயே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். பிரதமரோ ஜனாதிபதியோ அரசாங்கத்தில் வேறு எவருமோ நாட்டை பிளவு படுத்துவதற்கு ஒருபோதும் இடம ளிக்கப் போவதில்லை என்றும் அதிகாரப் பகிரவு விடயத்திலே கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார.

ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பில் விளக்கமளித்த அமைச்சர்,

வட மாகாண சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி எந்த வகையிலும் அங்கீகரிக்காது.

இது தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சி பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகிறது. வட மாகாண சபையின் இந்த விவகாரத்தை உண்மையில் கணக்கிலெடுக்க முடியாது.

அவர்கள் எதனை நிறைவேற்றினாலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அரசாங்கம் என்ற வகையில் பாராளுமன்றத்துக்கே அந்த அதிகாரம் உள்ளது. பிரிவினைவாதத்துக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது.

நாட்டைப் பிளவுபடுத்தவோ சீர்குலைக்கவோ நாம் இடமளிக்கப் போவதில்லை என்ற சத்தியப் பிரமாணத்தை நாம் ஏற்கனவே செய்து கொண்டுள்ளோம். இது தொடர்பில் எந்தப் பேச்சுக்கும் இடமில்லை.

இந்த விவகாரத்தை சிலர் தமக்கு வாய்ப்பாக்கிக் கொள்ளப் பார்க்கின்றனர். கூட்டு எதிர்க்கட்சியினர் ஏன் வட மாகாண முதலமைச்சரை கைதுசெய்யவில்லை? எனக் கேள்வி எழுப்புகின்றனர்.

எம்மால் அவரைக் கைதுசெய்ய மட்டுமன்றி முழு மாகாண சபையையும் கைதுசெய்ய முடியும். ஏனெனில் பொலிஸ் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது.

சம்பந்தனையே கைதுசெய்தாலும் கூட வட, கிழக்குப் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. எனினும் அத்தகைய ஒரு குழப்பகரமான சூழலையே கூட்டு எதிர்க்கட்சி எதிர்பார்க்கிறது. மீண்டும் பயங்கரவாதம் அல்லது பிரிவினைவாதத்தை உருவாக்குவதையா அவர்கள் விரும்புகிறார்கள் என நாம் கேட்க விரும்புகின்றோம். நாட்டை அத்தகையதொரு மோசமான சூழ்நிலைக்கு மீண்டும் தள்ளிவிடுவதற்கு நாம் தயாரில்லை.

வட மாகாணத்தின் இந்த நடவடிக்கையை நாம் எதிர்க்கின்றோம். எனினும் மிக அவதானமாகவே இந்த விவகாரத்தைக் கையாள வேண்டியது முக்கியமாகிறது.

பல்வேறு தரப்பிலிருந்தும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப் படுவதால் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயறபடுவது அவசியமாகும்.

சில சில சம்பவங்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அது தொடர்பில் நாம் நடவடிக்கை எடுக்க முடியாது. அவதானத்துடன் செயற் பட்டு இதற்கான தீர்மானங்களை எடுப்பது முக்கியமாகும்.

வடக்கு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்காக பிரிவினைக்கு இடமளிக்க முடியாது. தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மீண்டும் நாட்டில் பயங்கரவாதத்தை தோற்றுவிக்க முயற்சிப்பவர்களுக்கு அரசாங்கம் இடமளிக்க முடியாது.

அரசாங்கம் அதன் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றும். அனைத்து இன, மத மக்களினதும் உரிமைகளை பிளவுபடாத ஐக்கிய இலங்கையில் பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முப்படையினருக்கும் ரூ.10ஆயிரம் உயர்வு

## ஜனாதிபதி மைத்திரி பரிந்துரை



கடந்த இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இந்த பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு முப்படையினருக்கும் வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பரிந்துரை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சரவையில் ஜனாதிபதி அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து இந்த யோசனையை முன் வைத்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கிய பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு முப்படையினருக்கு வழங்கப் படவில்லை.

ஜனாதிபதியின் இந்த தீர்மானத்திற்கு அமைய முப்படையினருக்கும் எதிர்வரும் காலங்களில் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கியமையே நாடு கடும் பொருளாதார நெருக்கடி ஏற்படக் காரணம் என சில தரப்பினர் சுட்டிக்காட்டி வரும் நிலையில், படையினருக்கும் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டால் மேலும் அரசாங்க செலவீனங்கள் அதிகரித்து பொருளாதாரப் பாதிப்புக்கள் ஏற்படக் கூடுமென பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5)

# மே தினக் கூட்டங்களுக்கு யாருமே அழைக்கவில்லை

## மேர்வின் சில்வா வருத்தம்



மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு தன்னை யாருமே அழைக்கவில்லை என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் மேதினக் கூட்டங்களில் கலந்து கொள்ளப் போகின்றீர்களா? யாரிடமிருந்து அழைப்பு வந்துள்ளது என்று வினவியுள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள மேர்வின் சில்வா தனக்கு யாரிடமிருந்தும் அழைப்பு வராத நிலையில், அழைப்பு விடுக்கப்படாமல் எந்தவொரு கூட்டத்திலும் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் கூட்டு எதிர்க்கட்சி குறித்தோ, சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணி குறித்தோ தாம் எதுவித கருத்தையும் வெளியிட விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஆரம்பக் கல்வியில் முதன்மை நிலை 1 இன் முக்கியத்துவம்

இன்றைய உலகில் மனித னின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகக் கல்வி விளங்குகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தைத் துரிதப்படுத்தும் பிரதான விசையாகவும் பொருளாதார வல்லாண்மைக் காரணியாகவும் கல்வி வலுப்பெற்று விட்டது. உலகமயமாதல் மற்றும் அறிவுப் பிரவாகம் காரணமாக மனித வாழ்வியலும் துரித மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. அதற்கு ஏற்ற வகை யில் பாடசாலையும் அதன் முகாமையும் ஆசிரியர்களும் வலுவூட் டம் பெற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதற்கான வழி வகைகளைத் தேடியறிந்து மேம்படுத்த வேண்டியது கல்வி நிர்வாகத்தின் பாரிய பொறுப்பாகும்.

கல்விக்கான செலவீனம் அதிகரித்து வந்துள்ள போதும் கல்வியில் வீழ்ச்சி நிலை தொடர்ச்சியானதாகவே காணப்படுகிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு நிவர்த்தி செய்யப் பட்டாலும் கூட தொடர்கதையாகவே உள்ளது. கல்வி பெறுதல் என்பது ஒவ்வொரு பிள் ளையினதும் பிறப்புரிமையாகும் என U.N.O. சாசனத்தில் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் உலகில் இன்னமும் 74 மில்லியன் சிறுவர்கள் பாடசாலை செல்லாது உள்ளனர் என்பது வியப்பூட்டும் உண்மையாகும். இலங்கையிலும் கூட பாடசாலைக்கு செல்லாத சிறு வர்கள் உள்ளனர். இந்நிலைமை பின்தங்கிய கிராமப்புறங்களில் கூடுதலாக காணப்படுகிறது. ஜன நாயகத்திற்காக எல்லோரும் ஆகக் குறைந்தது ஆரம்பக்கல்வியையாவது பெற்றிருக்க வேண்டும் என்பது C.W.W கன்னங்கரா வினது கூற்றாகும்.

“மனிதனை மனிதனாக்குவது கல்வி” என்றார் சுவாமி விவேகா னந்தர். இக்கூற்றின் தாற்பரிய த்தை உணர்ந்தே கட்டாயக்கல்வி (Compulsory Education) இல வசக் கல்வி (Free Education) எல்லோருக்கும் கல்வி (Education for All) என காலத்திற் குக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு இன்று எல்லோருக்கும் தரமான கல்வி (Quality Education) என்ற இலக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதுக் கல்வியானது ஆரம்பக்கல்வி, இடை நிலை க்கல்வி, உயர்கல்வி என்ற வகையில் வழங்கப்படுகிறது. இம் மூன்று நிலைகளில் மிக முக்கியமானதாக ஆரம்பக் கல்வி விளங்குகின்றது. இது அத்திபாரம் என் குறிப்பிடப்படுகிறது. ஒரு கட்டடத்திற்கு அத்திபாரம் எவ்வளவு முக்கியமானதோ அதே போல் இடை நிலைக் கல்வி, உயர் நிலைக் கல்வி என்பவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு ஆரம்பக் கல்வி மிக முக்கியமானதாக அமைகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள், மறுசீரமைப்பில் ஆரம்பக்கல்வி கலைத்திட்டமானது மாணவர் மையத்தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட



செயற்பாட்டு ரீதியான கற்றல், கற்பித்தலாகும்.

தரம்-1 தொடக்கம் தரம் 5 வரை யான ஆரம்பக்கல்வியானது மூன்று முதன்மை நிலைகளாக (Key Stages) பிரிக்கப்பட்டுள்ளது.

முதன்மை நிலை 1:-தரம் 1, தரம் 2
முதன்மைநிலை 2:- தரம் 3, தரம் 4
முதன்மை நிலை 3:- தரம் 5

மேற்கூறிய மூன்று முதன்மை நிலைகளில் மிக முக்கியத்துவம் பெற்றதாக முதன்மை நிலை 1 விளங்குகின்றது. ஆரம்பக்கல்வியை அத்தி பாரம் என்றால் இதனை அத்திபாரத் திற்குக் கீழே கட்டப்படும் பாய் இற்கு ஒப்பிடலாம். பாய் சரியாகக் கட்டப் பட்டால் தான் அத்திபாரமும் அதன் மேல் கட்டப்படுகின்ற கட்டடங்களும் உறுதியானதாக, பலமானதாக அமையப்பெறும். எனவே முதன்மை நிலை 1 இல் பிள்ளையினது சிறப்பான கற்றல் விருத்தி, ஆளுமை விருத்தி, சமூகவிருத்தி என்பன ஏனைய முதன்மை நிலைகளுக்குச் செல்லவும் அவற்றை இலகுவாக்கவும் அங்கு பிரகாசிப்பதற்குமான வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும். அதே வேளை இங்கு பிள்ளையிடம் ஏற்படுகின்ற பிழையான பதிவுகள் அவனுக்கு நிரந்தரப் பின்னடைவையே ஏற்படுத்தும். ஆகவே முதன்மை நிலை 1 ஆசிரியரது பொறுப்பு என்பது மிகப் பிரதானமானது. ஆசிரியர்கள் தமது பணியில் தாற்பரியத்தை விளங்கி வகை கூறுதலும் பயனுறுதியும் (Accountablity & Efficiency) வாய்ந்த கற்றல்-கற்பித்தலை மேற் கொள்ள வேண்டும். தரம் 1 இல் காலடி எடுத்து வைக்கின்ற பிள்ளை யானது பல்வேறு வீட்டுச் சூழல்களி லிருந்தும் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் தமக்குப் பரிச்சயமற்ற பாட சாலைச் சூழலுக்குள் பிரவேசிப் பதால் அப்பிள்ளைகளிடம் சில வாரங்கள் வரை

1. வீட்டுச் சூழலிலிருந்து பிரிந்தமை
2. புதிய சூழலை ஏற்றுக் கொள்வதில் இடர்பாடு
3. புதிய ஆசிரியர்
4. தேவைகளை நிறைவு செய்வதில் இடர்பாடு
5. சகபாடிகளினால் தொல்லை
6. மனவெழுச்சித் தாக்கங்கள் போன்ற காரணங்களால் கற்பதற்கான ஆர்வம் குறைய இடமுண்டு.

எனவே பிள்ளைகளின் இடர்பாடுகளை நீக்கிப் பிள்ளைகளை மகிழ்ச்சியாகக் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது முதன்மை நிலை 1 இன் ஆசிரியரின் கைகளிலேயே தங்கி உள்ளது. பிள்ளைகள் மகிழ்வை அனுபவிப்பதற்கும் வெற்றி யைப் பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். இங்கு மகிழ்ச்சி கரமான செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டப்பட்ட விளையாட்டுக்களுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

முதன்மை நிலை 1 பிள்ளைகளிடம் புலனுணர்வுகள் ஊடாகவே கற்றல் நடைபெறுவதால் இயன்ற வரை உண்மைப் பொருட்கள் மூலம் கற்பிப்பது சிறந்ததாகும். அத்துடன் ஒலி, நிறங்கள், படங்கள், அசையும் பொருட்கள், தொடுகை நுகர்வு போன் றவற்றின் ஊடாக கற்பித்தல் ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

“இயற்கைச் சூழலுடன் இடைவினைத் தொடர்புகளை மேற்கொள்ளும் போதே கற்றல் நிகழ்கின்றது” என்றார் ரூசோ. எனவே பாடசாலைக்கு அண்மித்த இயற்கைச்சுற்றா டலை மிகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

“பிள்ளைகள் தம் புலன்களால் அனுபவம் பெற்று அறிவைப் பெற வேண்டும். கருத்தற்ற சொற்களை முதலில் கற்பித்தலும் பார்க்க பொருட்களைக் கொடுத்து அவற்றை அறி யச் செய்யவேண்டும்”

(பெஸ்ரலோஜி)

“சுதந்திரமாக குழந்தைகள் தாம் விரும்பியவாறு கற்க வேண்டும் ஆசி ரியப் பணி கற்பித்தல் அல்ல, பிள்ளைகளுக்கு வழிகாட்டலும் ஊக்கப்படுதலுமே ஆகும்”

(மொண்டிசோரி)

ஆரம்பக்கல்விப் பயிற்சி பெறாத எவரும் ஆரம்பக்கல்வி வகுப்பறை களில் கற்பிக்கத் தகுதியற்றவர்கள் என்பது கல்வி உளவியலாளர்களி னதும் கல்வியாளர்களினதும் கருத்தாகும். முக்கியமாக முதன்மை நிலை 1 இன் ஆசிரியர் ஆரம்பக்கல்விப் பயிற்சியுடன் உயர் வாண்மைத்துவமுடையவராகவும் முதன்மை நிலை 1 இல் அனுபவமும் பெற்றிருப்பது பிரதானமானதாகும். முதன்மை நிலை 1 இல் ஆரம்பக் கல்வியில் பயிற்சி பெறாதவர்கள் அல்லது ஏனைய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பிப்பது என்பது பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியை மழுங் கடிப்பதாகவே இருக்கும் என்பதை பொறுப்பானவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். “முதற் கோணல் முற்றுங் கோணல்” என்பது பழமொழி. பல பாடசாலைகளில் ஆரம்பக் கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருந்தால் கூட அவர்களைப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தலுக்காக தரம் 04, தரம் 05 வகுப்புக்களுக்கே நியமிப்பதுடன் அங்கே வள ஒதுக்கீடும் குவியப்படுத்தப்படுகிறது. மாறாக முதன்மை நிலை 1 இற்கான கவனம் மிகக் குறைவாகவே உள்ளமை அனைத்து பாடசாலைகளிலும் அவதானிக்க முடியும். இது ஒரு மிகத் தவறான அணுமுறை என்பதை பொறுப்பானவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் அனைத்து வளங்களும் சிறப்பாகக் குவியப்படுத்தப்பட வேண்டியது முதன்மை நிலை 1 இற்கே ஆகும். இங்கு வழங்கப்படுகின்ற கற்றலே தன்மயமாக்க லுக்கும் தன்னமைவாக்கலுக்கும் உள்ளாகி ஏனைய முதன்மை நிலைகளில் செல்வாக்குச் செலுத்தும்.

முதன்மை நிலை 1 இல் ஒரு பிள்ளைக்கு ஏற்படும் ஊக்கல்கள்/ தடைகள் அவனது அடுத்த முதன்மை நிலைகளுக்கு விருத்தியையும்/ பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் .எனவே பிள்ளையின் விருத்திப் பருவங்களையும் அதன் இயல்புகளையும் அறிந்த (உளவியல்) ஒரு ஆசிரியராலேயே அவனை வளப்ப டுத்த முடியும்.

“அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்
பார்பவற்றை நினைவிற் கொள்கின்றனர்-ஆனால்
செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது
கற்றுக் கொள்கின்றனர்”

(கன்பூசியஸ்)

என்ற கருத்து நினைவிற் கொள் ளத்தக்கது. கல்வி சீர்திருத்தமும் செயல் ரீதியான கற்றலையே வலியுறுத்துகின்றது. பிள்ளைகளுக்கு அக ஊக்கலை வழங்குவதன் மூலம் பிள்ளைகளிடம் நேர்மறைச் சிந்தனையை (Positive Thinking) வளர்த்தெடுக்க வேண்டும். இது ஆசிரியரின் பிரதான பணியாகும். இதற்கு ஆசிரியருக்கு உளவியல் தெரிந்திருக்க வேண்டும்.

முன்பள்ளி செயற்பாடுகளும் முதன்மை நிலை 1 இல் தாக்க த்தை ஏற்படுத்தும். ஆகவே முன் பள்ளிகளில் ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்டமும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் நியமிக்கப்படுதல் மிகவும் கட்டாயமானதாகும்.

கல்வி கற்பது, கற்பிப்பது உளத் துடன் சம்பந்தப்பட்டது. கற்பவனது உள்ளமும் கற்பிப்பவரது உள்ள மும் வளப்படுத்தப்பட வேண்டும். ஆகவே பிள்ளை உளவியல் தெரி ந்த ஒரு ஆசிரியராலே பிள்ளையின் உளத்தை சீர்மியப்படுத்த முடியும்.

எனவே முதன்மை நிலை 1 ஆசிரியரின் பொறுப்பு என்பது மிகப் பெரியது என்பதையும் கடினமா னது என்பதையும் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**சு.செல்வேந்திரன்**
ஆசிரியர்,
யா/கல்வியங்காடு
இ.த.க.பாடசாலை.



கல்வித் தரிசனம்

# மகிந்தவும் கருணாநிதியும் தான் இனப் படுகொலைக்கு காரணம்

## நாஞ்சில் சம்பத் குற்றச்சாட்டு



இலங்கையில் இடம்பெற்ற யுத்தக்குற்றம் தொடர்பான சர்வதேச நீதிமன்ற வசாரணையின்போது மகிந்த ராஜபக்ஷவுடன் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியும் தண்டிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு நேற்று கரூரில் அ.தி.மு.க. வேட்பாளர் எம்.ஆர். விஜயபாஸ்கரை ஆதரித்து பிரசாரம் செய்த நாஞ்சில் சம்பத் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கையில் போர் உக்கிரமாக இடம்பெற்ற வேளையில், இலங்கை இராணுவத்திற்கு யுத்த வீரர்களையும், இராணுவத் தளபாடங்களையும் காங்கிரஸ் அள்ளிக் கொடுத்தது.

இதன்போது தமிழகத்தை ஆட்சி செய்த கருணாநிதி போரைத் தடுக்க முயற்சி செய்தாரா? அல்லது தனது எம்.பிக்களை வாபஸ் பெற்றுக்கொண்டாரா?

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையில் மகிந்த முதல் குற்றவாளி என்றால், அடுத்த குற்றவாளி கருணாநிதியே.

எனவே, கருணாநிதியையும் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்த வேண்டும் என நாஞ்சில் சம்பத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# டீசல் தயாரிப்பு ஆலையில் பயங்கர தீ விபத்து

## பல கோடி ரூபாய் பொருட்கள் எரிந்து நாசம்



ஆந்திர மாநிலம் விசாகபட்டினத்தில் செயற்படும் பயோ டீசல் தயாரிப்பு ஆலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து சேதமடைந்துள்ளன.


விசாகபட்டினத்தில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலத்தில் இந்தியாவின் மிகப் பெரிய பயோ டீசல் தயாரிப்பு ஆலை ஒன்று செயற்பட்டு வருகிறது.

டீசல் சேமித்து வைக்கப்பட்டிருந்த கொள்கலன் ஒன்றில் நேற்று முன்தினம் திடீரென தீப்பற்றியதால் வெடித்து சிதறியது. இதனால் அருகிலிருந்த கொள்கலன் களும் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறி தீப்பற்றி எரிந்தன.

ஆலையில் மொத்தம் உள்ள 15 பிரம்மாண்ட டீசல் கொள்கலன்களில் 11 கொள்கலனை நாசம் செய்த தீ பல அடி உயரத்திற்கு கொளுந்து விட்டு எரிவதால் தீயணைப்பு வீரர்கள் அருகில் செல்லக் கூட முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து கடற்படை வீரர்கள் வரவழைக்கப்பட்டு தீயணைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பல மணி நேரம் எரிந்த தீயில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. இருப்பினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.(இ-5)

## பாரதச் செய்தி

# 16 கோடி ஆண்டு பழைமையான டைனோசர் எலும்பு எரிந்து நாசம்



டில்லி தேசிய அருங்காட்சியகத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில், 16 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பல்லிகால்வடிவம் கொண்ட டைனோசர் புதைபடிவ எலும்பு உட்பட பல்வேறு புராதன சிறப்பு வாய்ந்த பொருட்கள் எரிந்து நாசமாயின. மத்திய டில்லியின் தான்சேன் மாரக் பகுதியில் இந்திய தொழில் மற்றும் வர்த்தக சபை கூட்டமைப்புக்கு(பிக்கி) சொந்தமான 6 மாடி கட்டடத்தின் மேல்தளத்தில் மத்திய அரசின் தேசிய இயற்கை வரலாறு அருங்காட்சியகம் செயற்பட்டு வருகிறது. இங்கு ஆயிரக்கணக்கான ஊர்வன, நீர், நிலவாழ் பிராணிகளின் மாதிரிகள் மற்றும் பாடம் செய்யப்பட்ட விலங்குகளின் உடல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதனை தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்துச் செல்கின்றனர்.

இந்நிலையில், இந்தக் கட்டடத்தில் நேற்று முன்தினம் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க போராடினர். தீயின் வேகம் தணியாததால், 37 தீயணைக்கும் வண்டிகளில் வந்த 100இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க முயற்சி செய்தனர். சுமார் 4 மணி நேர போராட்டத்திற்குப் பின் தீ அணைக்கப்பட்டது. ஆனால், அதற்குள்ளாக அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த 16 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பல்லி கால் வடிவம் கொண்ட டைனோ சர புதைபடிவ எலும்பு, பாடம் செய்யப்பட்ட விலங்குகளின் உடல்கள் உட்பட பழைமையான, புராதன சிறப்பு மிகுந்த பொருட்கள் பல முற்றிலு மாக எரிந்து நாசமானது. இந்த தீவிபத்தில் அந்தக் கட்டடத்தின் 4ஆவது மற்றும் 5ஆவது தளங்களும் முழுமையாக சேதம் அடைந்தன.

தீவிபத்திற்கான காரணம் என்னவென்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் நடைபெற்ற போது, அந்தக் கட்டடத்தில் குறைவான மக்களே இருந்ததால், அவர்கள் அனைவரும் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதனால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. இதற்கிடையே, தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட போது, புகையை அதிகமாக சுவாசித்ததால் 6 தீயணைப்பு வீரர்களுக்கு கடும் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இது குறித்து தகவலறிந்த மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், "தீ விபத்தால் எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்பது தெரியவில்லை. இழந்தவற்றை எவ்வாறு மீட்பது என்பதற்கான உத்திகள் இன்னும் ஓரிரு நாட்களில் வகுக்கப்படும்'' என்றார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள 34 தேசிய அருங்காட்சியகங்களிலும் உடனடியாக பாதுகாப்பை தணிக்கை செய்யுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மோடி அரசின் செயற்பாடுகளால் ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்து

## சோனியா காந்தி குற்றச்சாட்டு

பிரதமர் நரேந்திர மோடி அரசு செயற்படும் விதத்தால், ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கு வங்கத்தின் Canning Paschim பகுதியில் நேற்று முன்தினம் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சோனியா காந்தி, மோடியின் ஆட்சியில் ஜனநாயக மதிப்பீடுகளும், மதச்சார்பின்மையும் கடும் நெருக்கடியைச் சந்தித்து வருவதாக தெரிவித்தார்.



மேற்கு வங்கத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது, பல்வேறு வாக்குறுதிகளை அளித்து மம்தா பானர்ஜி வெற்றி பெற்றதாகக் கூறிய சோனியா காந்தி, ஆனால் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

மம்தா பானர்ஜியைப் போலவே, மக்களிடம் ஏராளமான வாக்குறுதிகளை அளித்து, கடந்த மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றவர் நரேந்திர மோடி என்றும் குறிப்பிட்ட சோனியா காந்தி, இருவருமே, ஜனநாயகத்திற்கு ஆபத்தானவர்கள் என்றும் விமர்சித்தார். (இ-5)

# கையிருப்பு 40,000 ரூபா கடன் எட்டு லட்சம் ரூபா

## சொத்துக்கணக்கை தாக்கல் செய்த சீமான்

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தனது கையிருப்பாக ரூ.40 ஆயிரம் உள்ளதாகவும் ரூ.8 இலட்சத்துக்கு கடன் உள்ளதாகவும் தனது வேட்புமனுவில் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் கடலூர் தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் நேற்று கடலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேரதல் அலுவலர் உமா மகேஸ்வரியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அதில் தமக்கும் தனது மனைவிக்கும் உள்ள சொத்துகள் பற்றிய விவரங்களை சீமான் தாக்கல் செய்துள்ளார்.

**அதன் விபரம்:**

சீமானிடம் கையிருப்பாக ரூ.40 ஆயிரமும், வங்கிகளில் பல்வேறு இருப்புகளாக ரூ. 81,176 உள்ளது.

ரூ.26.50 இலட்சம் மதிப்பில் ஒரு காரும், ரூ.4.50 இலட்சம் மதிப்பில் மற்றொரு காரும் உள்ளது .

150 கிராம் எடையுள்ள தங்க நகைகள் உள்ளன. இவைகளின் மொத்த மதிப்பு ரூ.35,36,177ஆகும்.

அசையாச் சொத்துக்களான வீடு, நிலம் உள்ளிட்டவை ஏதும் இல்லை.

தனியார் வங்கியில் ரூ.8.97 இலட்சம் கடன் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சீமான் தன் மீது 3 வழக்குகள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தீவிரவாதிகளின் 800 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி அழிப்பு

## அமெ.கூட்டுப்படை தாக்குதல்

(வோஷிங்டன்)

**ஐ.எஸ் தீவிரவாதிகளின் 800 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதி களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த கட்டடத்தை, வான் தாக்குதல் மூலம் அமெரிக்க கூட்டுப் படையினர் அழித்துள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.**

ஈராக் தலைநகர் பக்தாத்தில் பணியாற்றும் மேஜர் ஜெனரல் பீட்டர் ஜெர்ஸ்ரென் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், ஐ.எஸ் தீவிரவாதிகளின் நிதி களஞ்சிய இலக்குகளைக் குறிவைத்து அமெரிக்க கூட்டணி அண்மைக் காலமாக தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றது. இதனடிப்படையில் ஐ.எஸ்.தீவிரவாதக் குழுவின் 90 வீதமான நிதி மூலம் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், புதிய நிதி வருகை மூலங்களும் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் நிதி நிலைமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்க கருவூலத் திணைக்களம், ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் உலகின் பாரிய நிதி திரட்டு தீவிரவாத அமைப்பு என சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# அமைச்சரவையில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

## ஹிலாரி கிளின்டன் வாக்குறுதி



அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தேர்தல் களம் சூடுபிடித்து வருகிறது. ஜனநாயக கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டனும், குடியரசு கட்சி தரப்பில் டொனால்டு டிரம்பும் முன்னணியில் உள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்கு மேரிலாந்து, பென்சில்வேனியா, டெலாவர், கனெக்டிகட், ரோட் தீவு ஆகிய 5 மாகாணங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களை தேர்வு செய்வதற்கு ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சியில் தேர்தல் நடந்தது.


முன்னதாக இந்த தேர்தலுக்காக ஹிலாரி கிளின்டன், டவுன் ஹால் பிரசார கூட்டம் ஒன்றில் பேசினார். அப்போது அவர், "நான் ஜனாதிபதி பதவிக்கு வந்தால் எனது அமைச்சரவை அமெரிக்கா போல இருக்கும்.

அமெரிக்காவில் 50 சதவீதம் பேர் பெண்கள் அல்லவா? நான் சொல்வது சரிதானே?" என கேட்டார். இதன்மூலம் தனது அமைச்சரவையில் 50 சதவீதம் பேர் பெண்கள் என்பதை அவர் சூசகமாக தெரிவித்துள்ளார்.

அவரது பிரசார நிர்வாகி ஜான் பொடஸ்டா, 'இந்திய அமெரிக்கரான நீரா தாண்டனை கிலாரியின் அமைச்சரவைளயில் பார்க்க நான் விரும்புகிறேன்' என கருத்து தெரிவித்த நிலையில், தனது அமைச்சரவையில் 50 சதவீதம் பெண்கள் இடம்பெறுவார்கள் என ஹிலாரி கூறி இருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. (இ-5)

# போர் நிறுத்தத்தை மீறி சிரியாவில் தாக்குதல்

## குழந்தைகள் உட்பட 30 பேர் பலி!



சிரியாவில் கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டுள்ள போதிலும் அலெப்பே நகரில் ரஷ்யாவும், சிரிய படைகளும் இணைந்து கடும் தாக்குதல் நடத்தி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கி ழமை மாத்திரம் ரஷ்யா மற்றும் சிரிய படைகள் இருபதுக்கும் மேற் பட்ட நகரங்கள் மீது வான் தாக்குதல்கள் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக அப்பாவி பொது மக்களின் குடியிருப்புக்கள் பல அளிக்கப்பட்டதுன், அவர்களின் சொத்துக்கள் பாரிய அளவில் அளிக்கப்பட்டன.

மேலும் குழந்தைகள் உட்பட 30 இற்கும் மேற்பட்ட அப்பாவி பொது மக்கள் பலியாகிய அதே வேளை, நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இவர்களின் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# பெண்கள் கார் செலுத்த சவுதி இளவரசர் எதிர்ப்பு



சவுதியில் பெண்கள் கார் செலுத்துவதிலுள்ள தடையை நீக்க அந்நாட்டு இளவரசர் மறுத்துள்ளார்.

சவுதி அரேபியாவில் பெண்கள் கார் செலுத்துவது என்பது தொழில்நுட்ப ரீதியாக சட்டத்துக்கு எதிரானது இல்லையென்றாலும் வீதிகளில் பெண்கள் கார் செலுத்துதற்கு அனுமதி இல்லை. பெண்கள் வாகன சாரதி உரிமம் பெற தடை விதிக்கப்பட்டுள்ளதே இதற்கு காரணம். எனினும் நகரங்களில் உள்ள பெண்கள் கார் செலுத்துவதற்கு சில சலுகைகள் உள்ளன. இந் நிலையில் கடந்த திங்களன்று இளவரசர் முகமது பின் சல்மான் அளித்த பேட்டியில் , பெண்களை கார் செலுத்த அனுமதிப்பது என்பது மதரீதியான பிரச்சினை என்பதை தாண்டி சமூக ரீதியாகவும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள் ளார்.

அதேவேளையில் பெண்களுக்கு கூடுதல் சுதந்திரம் கிடைப்பதற்கு தனது ஆதரவு எப்போதும் இருக்கும் என்று கூறியுள்ள அவர் சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ள முடியாது, எனினும் எதிர்காலத்தில் மாற்றம் ஏற்படும என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சுவீடனில் ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல் நடத்தத்திட்டம்

ஐ.எஸ்.தீவிரவாதிகளால் சுவீடன் நாட்டிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பில், அந்நாட்டு புலனாய்வு சேவை விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. குறித்த விசாரணைகள், சுவீடன் நாட்டின் தலைநகர் ஸ்டொக் ஹோமில் (Stockholm) நடத்தப்படுவதாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பில் இருந்து ஏழு அல்லது எட்டு தீவிரவாதிகள் சுவீடன் நோக்கி பயணித்துள்ளதாக ஈராக் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தே குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த தொடர் விசாரணைகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. மேற்குறித்த விசாரணைகள் தொடர்பான விடயங்கள் தேசிய பொலிஸ் சேவையுடன் பகிரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டொக்ஹோமில், ஏறக்குறைய 9 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருவதாகவும், அங்கு இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருவதாகவும் அதனால் எந்நேரமும் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்புடன் இருப்பதாக, இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# எலிசபெத் கோபுரக் கடிகாரம் பல மாதங்களுக்கு ஒலிக்காது

உலகப் புகழ்பெற்ற பிக்பென் (எலிசபெத்) கோபுரத்திலுள்ள கடிகாரம் பல மாதங்களுக்கு ஒலிக்காமல் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 315 அடி உயரத்தில் கடந்த 1856ம் ஆண்டு நிர்மாணித்து முடிக்கப்பட்ட இந்த கோபுரத்தில், உள்ள வெடிப்புகளை அவசரமாக பழுது பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

என்வே பல மாதங்களுக்கு ஒலிக்காமல் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை சரிசெய்ய 30 மில்லியன் டொலர் அளவுக்கு செலவாகும் என கணிக்கப்பட்டுள்ள நிலையில், இதன் வண்ணத்தையும் மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# மீண்டும் ஏவுகணைத்தாக்குதல்; தயாராகின்றது வடகொரியா

கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் வகையிலான ஏவுகணை சோதனையை வடகொரியா விரைவில் நடத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வட கொரியா கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி நடத்திய ஏவுகணை சோதனை தோல்வியில் முடிந்ததாக கூறப்படு கிறது. இதையடுத்து கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் திறன் கொண்ட ஏவுகணையை தற்போது மீண்டும் சோதனை செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தனது 4 ஆவது அணு ஆயுத சோதனையை கடந்த ஜன வரி 6ம் திகதியும் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணை சோத னையை பெப்ரவரி 7 ஆம் திகதியும் வட கொரியா நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியா மீது ஐ.நா. பொருளாதார தடை விதித்திருந்தது.

எனினும் தனது சோதனையை அந்நாடு தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்நிலையில் தான் தற்போது புதிய கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணையை சோதித்து பார்க்கவுள்ளதாக கூறப்படுகிறது.

சுமார் 1800 மைல்கள் சென்று தாக்கும் சக்திகொண்ட இந்த ஏவுகணை மூலம் ஜப்பான் நாட்டை வெற்றிகரமாக தாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அ.தி.மு.க. பிரமுகரை எதிர்த்த பெண் எஸ்.பியை கொல்ல முயற்சி

அ.தி.மு.க பிரமுகர் அன்புநாதனுக்கு சொந்தமான குடோனில் சோதனை நடத்திய மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டேவை கொலை செய்ய முயற்சி நடந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக சட்டசபைத் தேர்தல் மே 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனையடுத்து வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதைப்படுவதை தடுக்க தேர்தல் ஆணையம் பல்வேறு அதிகாரிகள் குழுவை கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

இந்நிலையில் கடந்த 22 ஆம் திகதி கரூர் மாவட்டம், அய்யம்பாளையம் பகுதியை சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் அன்புநாதனுக்கு சொந்தமான குடோன் மற்றும் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் 4.87 கோடி ரூபாயை வருமான வரித்துறையினர் பறிமுதல் செய்தனர்.

அம்புலன்ஸ், வாகனங்கள், பணம் எண்ணும் இயந்திரங்கள் என பலவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இந்த அதிரடி சோதனையை பெண் எஸ்.பி. வந்திதா பாண்டே முன்னின்று நடத்தினார்.

இந்த நிலையில் பெண் எஸ்.பி. வந்திதா பாண்டேவை கொலை செய்ய முயற்சி நடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எஸ்.பி. அலுவலகத்துக்கு துப்பாக்கியுடன் வந்த கரூர் பரமத்தியைச் சேர்ந்த வெங்கடேசன் என்பவரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மர்மநபர்கள் பெண் எஸ்.பி.யை கொல்லுமாறு தம்மிடம் துப்பாக்கி தந்ததாக வெங்கடேசன் தகவல் தெரிவித்துள்ளார். இதனால் பணம் பதுக்கியவர்கள் பெண் எஸ்.பி. கொல்ல முயற்சியா என பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-27.04.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.57 | 147.39 |
| பிரிட்டன் | பவுண்ட் | 208.82 | 214.22 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.49 | 167.94 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.72 | 152.83 |
| கனடா | டொலர் | 113.29 | 118.01 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 109.38 | 114.49 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.07 | 110.15 |
| இந்தியா | ரூபா | 2.1637 | ------- |
| சீனா | யுவான் | 22.1772 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6672 |
| குவைத் | டினார் | 476.9955 |
| ஓமான் | ரியால் | 373.7420 |
| கட்டார் | ரியால் | 39.5183 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3698 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1767 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 30 | 70 | 40 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 70 | 80 | 60 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 50 | 100 | 70 | 120 | 60 |
| தக்காளி | 80 | 100 | 90 | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 40 | 45 | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 60 | 100 | 60 | 80 | 80 | 100 | 70 |
| கரட் | 100 | 100 | 90 | 80-200 | 90 | 120 | 80 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 30 | 60 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 35 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 90 | 70 | 80 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 70 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 100 | 100 | 100 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 40 | 70 | 50 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 70 | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 100 | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 80 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 30 | 70 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 250 | 300 | 300 | 200 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 140 | 120 | — | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 25 | 50 | — | 40 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 30-50 | 20 | 40 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 400 | 200 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 10-25 | 50 | 40 | 30-35 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 100 | 160 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | — | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | 40 | 70 | 40 | 120 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 120 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சந்திரிகா– பிரபாகரன் கடிதப் பரிமாற்றம் 167

1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி மிக இரகசியமாக மாத்தையாவுக்கும் அவர் சகாக்களுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு சி.புஷ்பராஜா கூறியுள்ளார்.

சமரசப் பேச்சு தொடங்குவது குறித்து சந்திரிகாவும் பிரபாகரனும் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் ஜெயவர்த்தனா வெற்றி பெற்ற பிறகு ஐக்கிய தேசியக் கட்சியின் பிடியில் 17 ஆண்டுகள் இருந்தது. ஜெயவர்த்தனா பிரேமதாசா என யார் ஆண்டாலும் தமிழர் பிரச்சினையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இதனால் மக்கள் மனம் வெதுங்கிப் போய் இருந்தனர்.

இந்த நிலையில் 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 19 ஆம் திகதி சந்திரிகா பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

### நட்புக்கரம்

புதிய பிரதமராக சந்திரிகா பதவி ஏற்றதும் விடுதலைப் புலிகள் அவருக்கு பாராட்டுத் தெரிவித்தனர்.

சந்திரிகாவும் விடுதைப்புலிகளுக்கும் புதிய அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவானது.

### பொருளாதார தடை நீக்கம்

அரசும் யாழ்ப்பாணப்பகுதிக்கு அதுவரை விதித்திருந்த பொருளாதாரத்தடையைத் தளர்த்தி அத்தியாவசிய பொருட்கள் கொண்டு செல்ல அனுமதி அளித்தது.

அரசின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளும் நல்லெண்ண அடிப்படையில் தங்கள் வசம் காவலில் வைக்கப்பட்டிருந்த 10 பொலிஸாரை விடுதலை செய்வதாக அறிவித்தனர்.

### 10 பொலிஸார் விடுதலை

விடுதலைப்புலிகள் வசம் 1990 ஆம் ஆண்டிலிருந்து 19 பொலிஸார் கைதிகளாக இருந்து வந்தனர். அவர்களில் 10 பேரை விடுதலைப்புலிகள் விடுதலை செய்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி இராணுவ முகாமுக்கு அவர்கள் அனுப்பப்பட்டனர்.

பின்னர் 10 பொலிஸாரும் விமானப்படை மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர். அங்கு பொலிஸாரின் உறவினர்கள் விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றனர்.

### மந்திரி பேச்சு

யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி இராணுவ முகாமுக்கு மந்திரி அனுருத்தா விமானத்தில் சென்று விடுதலையான பெலிஸாரைப் பார்த்தார் ராணுவத்தினர் மத்தியில் பேசினார். இது போல வேறு முகாம்களுக்குச் சென்று ராணுவத்தினரிடையே பேசினார்.

அப்போது விடுதலைப்புலிகள் பிரச்சினை பற்றியும் குறிப்பிட்டார். ராணுவ வீரர்களில் சிலர் விடுதலைப்புலிகளை எந்த அளவுக்கு நம்ப முடியும் என்று கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு பதில் அளித்த மந்திரி அனுருத்தா அமைதி ஏற்பட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம். அதில் தோல்வி ஏற்பட்டால் உங்கள் பக்கம் வருவோம் என்று கூறினார்.

### பிரபாகரன் கடிதம்

அரசின் நடவடிக்கை விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு உற்சாகத்தை அளித்தது.

இதுவரை எந்தப்பிரச்சினையிலும் நேரடியாக தலையிடாமல் இருந்து வந்த விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் முதல் தடவையாகப் பிரதமர் சந்திரிகாவுக்கு 6.9.1994 அன்று ஒரு கடிதம் எழுதினார். அரசு சார்பற்ற ஒரு அமைப்பு மூலம் இந்தக் கடிதம் அரசிடம் கொடுக்கப்பட்டது.

### போர் நிறுத்தம் செய்ய விருப்பம்

போர் நிறுத்தம் செய்யத் தயார் என்று பிரபாகரன் தனது விருப்பத்தை அந்தக் கடிதத்தில் தெரிவித்தார்.

அரசுடன் பேச்சு நடத்த விரும்புவதாகவும் இந்தப் பேச்சு வார்த்தையில் விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டும் தான் கலந்து கொள்ள வேண்டும் என்றும் பிரபாகரன் நிபந்தனை விதித்தார்.

பிரபாகரன் கடிதம் குறித்து அரசு கவனமாகப் பரிசீலனை செய்து வருவதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வுக்கு வழிகாணும் மற்றொரு நடவடிக்கையாகத் தமிழர் பகுதியான வடக்கு கிழக்கு மாநிலங்களில் இதுவரை இருந்து வந்த அவசர நிலையை ரத்து செய்து பாராளுமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தின் மீது நாள் முழுவதும் நடந்த விவாதத்துக்குச் சந்திரிகா பதில் அளிக்கையில், இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசு விரும்புகிறது. ஆனால் இதில் ரகசியம் எதுவும் இருக்காது என்று அறிவித்தார்.

### சந்திரிகா பதில்

பிரபாகரன் எழுதிய கடிதத்திற்கு இலங்கைப் பிரதமர் சந்திரிகா 9.9.1994 அன்று பதில் அனுப்பினார்.

அதில் அவர் கூறி இருந்ததாவது:-

அன்புள்ள திரு வி.பிரபாகரன் அவர்களுக்கு,


முந்தைய அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்கியமையை யாழ்ப்பாணம் மற்றும் வட பகுதி மக்கள் மட்டில் எமக்கிருக்கும் நல்லெண்ணைத்தை வெளிப்படுத்தும் செயலாக விடுதலைப்புலிகள் வரவேற்றிருப்பதை அறிந்து கொள்வதில்லை நாம் மகிழ்ச்சியடைகிறோம்.





(தொடரும்)

# மகிந்தவுக்கு துமிந்த சவால்





முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க சவால் விடுத்துள்ளார்.

காலியில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்போரின் எண்ணிக்கையை விடவும் முடிந்தால் ஒரு நபரையேனும் கூடுதலாக கிருலப்பனை கூட்டத்தில் திரட்டிக் காட்டுமாறு துமிந்த சவால் விடுத்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றிற்கு வழங்கிய நேர்காணலின்போது இந்த சவாலை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் காலி சமனல மைதானத்தில் மட்டுமே நடத்தப்படுகிறது. வேறு எந்தவொரு இடத்திலும் சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை.

கிருலப்பனையில் நடத்தப்படவுள்ள மே தினக் கூட்டம் சுதந்திரக் கட்சியின் கூட்டமல்ல உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு திரட்டும் கூட்டமாகும். சுதந்திரக் கட்சியின் பலத்தை முழு நாட்டுக்கும் காண்பிக்கும் தொழிலாளர் கூட்டமாகும்.

மெய்யான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் காலிக் கூட்டத்தில் பங்கேற்பார்கள். மக்கள் யாருடன் இருக்கின்றார்கள் என்பதனை அன்றைய தினம் பார்க்க முடியும்.

மகிந்த ஜனாதிபதி தேர்தலில் தோற்றார், பொதுத் தேர்தலில் தோற்றார். எனவே அவர் மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

கிருலப்பனைக் கூட்டத்திற்கு ஆட்களை திரட்ட முடியாதவர்கள் சுதந்திரக் கட்சியின் பெயரையும் தலைவர்களின் பெயர்களையும் மிகவும் இழிவான முறையில் பயன்படுத்தி வருகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# இலங்கை பூராகவும் புதிதாக 172 பொலிஸ் நிலையங்கள்

## சட்டம், ஒழுங்கு அமைச்சர் தகவல்



(கொழும்பு)

நாடு முழுவதும் புதிதாக சுமார் 172 பொலிஸ் நிலையங்கள் உருவாக்கப்படவுள்ளதாக சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் வெல்லவ பொலிஸ நிலையத்தை நவீனமயப்படுத்தி திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் சாகல ரத்நாயக்க,

நாட்டில் தற்போதைக்கு 428 பொலிஸ் நிலையங்கள் செயற்படுகின்றன. இதனை 600 பொலிஸ் நிலையங்கள் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.


பொலிஸாருக்கு நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறைகள் தொடர்பில் போதுமான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பொலிஸாரின் அடிப்படை சம்பளம் நாற்பது வீதத்தால் அதிகரிக்கப்படும். பதவி உயர்வுகளும் உரிய நேரத்தில் வழங்கப்படும்.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரிகளையும் நவீனமயப்படுத்தவும், அவற்றின் வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# குறுகிய காலத்தில் பொருளாதார சரிவை காட்டியது நல்லாட்சியே

## விமல் வீரவன்ச விமர்சனம்



ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் பொருளாதாரத்தில் பாரிய சரிவை பெருமையாகக் காட்டியது இந்த நல்லாட்சி அரசாங்கமே என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவர் இதனை தெரிவித்தார்.

மேலும் இளம் சமுதாயத்தை காரணம் காட்டி இலவச Wi-Fi தருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது சாதாரண அழைப்பு கட்டணத்திற்கும் கூடிய வரி அறவிடும் நிலையே காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களை அரசாங்கம் சார்ந்த செய்திகளை வெளியிடுமாறு அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும், அவ்வாறு இல்லாத பட்சத்தில், அந்த ஊடகத்துக்கான அனுமதி தடை செய்யப்படுமென அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும், இது தகவல் அறியும் உரிமையை மீறும் செயலெனவும் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டினார்.

மேலும் சென்ற வருடம் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் சிலரை தாக்க அடியாட்கள் அனுப்பிய சம்பவங்கள் இடம்பெற்றன,

இதனால் இம்முறை இது போன்று நடக்காமல் இருக்க பொலிஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ-5)

# எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான பெண்களுக்கு விளக்கமறியல்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெள்ளவத்தை பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அடையாளம் காணப்பட்ட விபசார விடுதியிலிருந்து கைதுசெய்யப்பட்ட இரண்டு தாய்லாந்து பெண்களையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைகுமாறு கல்கிசை நீதவான் நீதிமன்ற நீதிபதி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இருவருக்கும் எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளதாக மருத்துவ பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்ததையடுத்தே அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தையில், மசாஜ நிலையம் என்ற போர்வையில் இடம்பெற்ற விபசார விடுதியை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் பொலிஸார் முற்றுகையிட்டிருந்தனர். இதன்போது, இரண்டு தாய்லாந்து பெண்களும் உள்ளூரைச் சேர்ந்தை 7 பெண்களும் குறித்த விடுதியின் முகாமையாளரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, விடுதியின் முகாமையாளருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த நீதவான், அவரை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் செல்வதற்கு அனுமதியளித்தார்.

மேலும் கைது செய்யப்பட்டிருந்த உள்ளூரைச் சேர்ந்த 7 பெண்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். எனினும், தாய்லாந்து பெண்கள் இருவரையும் மருத்துவ பரிசோனைக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில், மருத்துவ பரிசோதனைகளில் குறித்த இரண்டு பெண்களுக்கும் எச்.ஐ.வி. தொற்று இருபதாக குறிப்பிடப்பட்டிருந்ததையடுத்து அவ்விருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஆறப்போட வேண்டியவை

மெத்தனமாகவும் சோம்பல் காரணமாகவும் பொறுப்பின்மை காரணமாகவும் சில விடயங்களை உரிய நேரத்தில் செய்து முடிக்காமல் நல்ல சந்தர்ப்பங்களை இழந்து தவிப்பவர்கள் மிகப்பலர்.

அதேசமயம் ஆற அமரச் செய்ய வேண்டிய விடயங்களை அவசரப்பட்டுச் செய்து வெண்ணெய் திரண்டு வருமுன் தாழியை உடைத்துவிடும் மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஏனோ தெரியவில்லை–விரைந்து செய்ய வேண்டிய விடயங்களைத் தாமதப்படுத்துவதும் ஆறப்போட வேண்டிய விடயங்களை அவசரப்படுத்துவதும் மனித இனத்தின் பொதுவான சுபாவமாக இருந்து வருகிறது. இந்தச் சுபாவத்திற்கு எப்படி நாம் முற்றுப்புள்ளி வைப்பது?

அதற்கான வரையறைகளை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

நேரத்திற்கு முக்கியத்துவம் உள்ள விடயத்தை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டும். நமக்குப் பொறுமையும் நற்பெயரையும் சேர்த்துத் தரும் விடயங்களை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டும்.

பண விடயத்தில்–நம் பொருளாதாரத்தைப் பாதிக்கும் அல்லது உயர்த்தும் விடயத்தில்–விரைந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பிறர் நம்மிடம் ஒப்படைக்கும் பொறுப்புக்களை விரைந்து செய்து முடிக்க வேண்டும்.

எதிர்காலத்தைப் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்றால் வேகமின்றியும் நிதானமின்றியும இடைப்பட்ட நிலையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சரி, ஆறப்போட வேண்டிய விடயங்கள் என்னென்ன?

நெடும்பகை–தீராத பகை உள்ளவர்களைச் சந்திப்பதைத் தள்ளிப்போட வேண்டும்.

மேற்கூறிய பல்வேறு வழிகளிலும் அடங்காத, தீராத பிரச்சினைகளைத் தாமதப்படுத்த வேண்டும்.

முன்னே சென்றால் முட்டும். பின்னே சென்றால் உதைக்கும் என்பது போன்ற சூழ்நிலை ஒரு விடய்த்தில் ஏற்பட்டால் அதையும் தள்ளிப்போட வேண்டும்.

நெடும்பகை நிலவும்போது மட்டுமன்றி ஒருவர் மீது கோபம் தோன்றும்போதும் வருத்தம் தோன்றும் போதும் அவரை உடனடியாகச் சந்திப்பதைத் தவிர்க்க வேண்டும். மாறாக இம்மாதிரிச் சூழ்நிலையில் ஆறப்போட்டால் நம் வேகம் குறையும். இருபக்க நியாயங்களும் புலப்படும்.

எவ்வகையிலும் தீராத பிரச்சினைகளுக்குக் காலம் தான் வழிவகுக்கும் என்பதால் ஆறப்போடுவதையே ஒரு பரிகாரமான செயலாகக் கொள்ளலாம்.

ஒட்டுமொத்தமாகச் சொல்லப்பட வேண்டுமானால்,

நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை தரக்கூடிய விடயங்களை உடனடியாகச் செய்ய வேண்டும். இதற்கு நேர்மாறான விடயங்களை ஆறப்போட வேண்டும்.


லேனா தமிழ்வாணன்





# வரதட்சணை!

**கோ**யிலில் இருந்து திரும்பிய கமலா வீட்டினுள் நுழைந்ததும், தன் வீட்டிற்கு யாரோ இரு விருந்தாளிகள் வந்திருப்பதைக் கண்டாள். அவர்கள் அவளுடைய தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குக் கமலாவை அறிமுகம் செய்து வைத்தார் அவள் தந்தை! அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுக் கமலா உள்ளே சென்று விட்டாள்.

சிறிது நேரங்கழித்து அவள் தந்தை அவளிடம் வந்து, "கமலா! அந்தப் பிள்ளை ரவி உன்னை ஒரு திருமணத்தில் பார்த்தானாம். அவனுக்கு உன்னைப் பிடித்திருக்கிறதாம் அதனால் பெண் கேட்பதற்காக தன் தந்தையுடன் வந்திருக்கிறான். இந்த வரன் அமைந்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஆனால், பிள்ளையின் அப்பா பத்தாயிரம் ரூபாய் பணத்தை வரதட்சிணையாகக் கேட்கிறார்?" என்றார்.





பார்ப்பதற்கு அழகாக இருந்த ரவியைத் திருமணம் செய்து கொள்வதை நினைத்தவுடனே மிகவும் மகிழ்ந்த கமலா வரதட்சிணை விடயத்தைக் கேட்டு மனமொடிந்து போனாள். அவளுடைய தந்தை வந்தவர்களிடம் யோசித்துச் சொல்வதாகக் கூறி அவர்களை வாயில் வரை சென்று வழி அனுப்பினார்.

அவர்கள் சென்றதும் வீட்டிற்குள் திரும்பி வந்த கமலாவின் தந்தை. "கமலா! உனக்குப் பிள்ளையைப் பிடித்திருக்கிறது என்று உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. அதனால் நான் சம்மதம் என்று சொல்லி விட்டேன்!" என்றார.

"ஐயையோ! வரதட்சிணைக்கு என்ன செய்வீர்கள், அப்பா?" என்று கவலையுடன் கமலா கேட்க, "அதைப்பற்றி கவலைப்படாதே! நான் எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன்!" என்று அவர் சொல்லி விட்டார். உடனே, திருமணத் தகதி குறிக்கப்பட்டு, திருமணத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கத் தொடங்கின.

வரதட்சிணைப் பணத்தை எப்படியோ ஏற்பாடு செய்து விட்டதாக கமலாவின் தந்தை கூறினார். திருமண தினமும் வந்தது. உறவினர்களும், நண்பர்களும் கூடிவிட்டனர்.

மணப்பெண்ணிற்கு அலங்காரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது, மிகவும் பருமனான ஒரு ஆள் மணப்பெண் தங்கியிருந்த வீட்டில் நுழைந்தார்.

"நான் ரவியின் பெரியப்பா! ரவி மணக்கப் போகும் பெண்ணை நான் பார்க்க விரும்புகிறேன்!" என்றார்.

(தொடரும்)




- 1192 - ஜெருசலேம் மன்னன் முதலாம் கொன்ராட் முடிசூடி இரண்டாம் நாள் கொலை செய்யப்பட்டான்.
- 1792 - பிரான்ஸ் ஆஸ்திரிய நெதர்லாந்தை முற்றுகையிட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் அட்மிரல் டேவிட் ஃபராகுட் கூட்டமைப்பிடமிருந்து லூசியானாவின நியூ ஓர்லென்ஸ் நகரைக் கைப்பற்றினான்.
- 1876 - இந்தியாவின் அரசியாக விக்டோரியா மகாராணி தெரிவு செய்யப்பட்டமை லண்டன் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.
- 1920 - அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.
- 1932 - மஞ்சள் காய்ச்சல் நோய்க்கான தடுப்புசி முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1945 - முசோலினியும் அவனது மனைவியும் இத்தாலிய எதிர்ப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1952 - இரண்டாம் உலகப் போரின் போது ஐக்கிய அமெரிக்காவினால் கைப்பற்றப்பட்ட ஜப்பானிலிருந்து அமெரிக்கப் புடைகள் வெளியேறின.
- 1965 - டொமினிக்கன் குடியரசில் ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் தரையிறங்கினர்.
- 1978 - ஆப்கானிஸ்தான் அதிபர் முகமது டாவூட கான் கம்யூனிச சார்புப் போராளிகளால் பதவியிறக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- 1995 - பலாலியில் அவ்ரோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதற்கு அடுத்த நாள் இன்னுமொரு விமானம் வீழ்த்தப்பட்டது.
- 2000 - இலங்கை இராணுவத்தினருக்கெதிரான விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
- 2001 - கோடீஸ்வரர் டென்னிஸ் டீட்டோ என்பவர் விண்வெளிக்குச் சென்ற முதல் உல்லாசப் பயணியானார்.
- 2005 - இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

**பிறப்புகள்**

- 1758 - ஜேம்ஸ் மன்ரோ, ஐக்கிய அமெரிக்காவின் ஐந்தாவது குடியரசுத் தலைவர் (இ. 1831)
- 1937 - சதாம் உசேன் - ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி (இ. 2006)

**இறப்புகள்**

- 1942 - உ. வே. சாமிநாதையர், தமிழறிஞர் (பி. 1855)
- 1945 - முசோலினி, இத்தாலிய நாட்டு சர்வாதிகாரி (பி. 1883)
- 1955 - தி. வே. சுந்தரம் அய்யங்கார், இந்திய தொழிலதிபர் (பி. 1877)
- 1999 - ஆர்தர் சவ்லோவ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1921)
- 2005 - தர்மரத்தினம் சிவராம், ஈழத்து ஊடகவியலாளர் (பி. 1959)

**சிறப்பு நாள**

- வேலையின் போது பாதுகாப்புக்கும் நலத்துக்குமான உலக நாள்

## தர்மரத்தினம் சிவராம், ஈழத்து ஊடகவியலாளர்



தர்மரத்தினம் சிவராம் (தராக்கி சிவராம்) ஓகஸ்ட் 11, 1959 ஆம் ஆண்டு கிழக்கிலங்கையின் மட்டக் களப்பில் மகேஸ்வரி, புவிராஜகீர்த்தி தர்மரட்ணம் அகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளரும் தமிழ் நாட்டின் பிரதான எழுத்தாளரும் முன்னாள் போராளியுமாவார். கொழும்பு பம்பலப்பிட்டியில் காவல் நிலையம் முன்பா்க வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட இவர் தாக்கப்பட்ட பின்னர் வாகனமொன்றில் கொண்டு வரப்பட்டு இலங்கை பாராளுமன்றத்துக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தலையை இலக்கு வைத்தே 9 மில்லி மீட்டர் வகை கைத்துப்பாக்கியினால் இவர் சுடப்பட்டுள்ளார்.

இவர் ஆரம்பக்கல்வியை புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். அதைத் தொடர்ந்து கொழும்பில் அக்குவானாஸ் கல்லூரியில் தொடர்ந்தார். பல்கலைக்கழகத்திற்கு தெரிவான இவர் பேராதனைப் பல்கலைகழகத்தில் அனுமதி பெற்றார். செப்ரெம்பர் 1981 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற அவர், ஆங்கிலத்தினையும் ஒரு பாடமாகக் கொண்டு இரண்டு ஆண்டுகள் மட்டுமே அங்கு பயின்ற பின்னர், அரசியல் ஈடுபாட்டினாலும், 1983 இல் இடம்பெற்ற இனக் கலவரங்களினாலும் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டார்.

சிவராம் அவர்கள் தராகி என்ற புனைபெயரில் ஆங்கிலத்தில் கொழும்பில் இருந்து வெளிவரும் "The Island" ஏட்டில் தமது முதலாவது கட்டுரையை 1989 இல் எழுதினார். அரசியல், போரியல் மற்றும் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. உள்நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் அவரது கட்டுரைகள் பெயர்பெற்றிருந்தன.

தர்மரத்தினம் சிவராமின் வாழ்க்கைக் கதை சிவராம் புகட்டும் அரசியல் - ஈழத்தின் புரட்சிகரத் தமிழ் ஊடகவியலாளனின் வாழ்வும் மரணமும் என்ற தலைப்பில் நூல் வடிவில் வெளிவந்திருக்கின்றது. இந்நூல் சிவராமின் நண்பரும், வட அமெரிக்காவில் உள்ள தென் கரோலினா பல்கலைக்கழக, மானிடவியல் துணைப் பேராசிரியருமான மார்க் பி. விற்ரேக்கரினால் (Mark P. Whittaker) எழுதப்பட்டுள்ளது. இந்நூலினை, லண்டனில் உள்ள Pluto Press பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

# விடுதலைப்புலிகளின் முன்னாள் திருமலை புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளர் கைது!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் திருமலை புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளர் கலையரசன் நேற்று முன்தினம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் கைப்பற்றப்பட்ட தற்கொலைத் தாக்குதல் அங்கி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

முன்னதாக இதே நோக்கத்தில் விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி ராம் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள கலையரசன் என்பவர் ராமின் நெருங்கிய சகாஎன்றும்இருவரும்இணைந்து பல தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதும் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள கலையரசன் எனும் விடுதலைப் புலிகளின் முன்னாள முக்கியஸ்தர் வன்னி யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினரிடம் சரணடையவோ, புனர்வாழ்வுக்கு உட்படவோ இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில்தனதுமனைவி பிள்ளைகளுடன் திருகோணமலையில்வசித்துக கொண்டிருந்த அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தற்கொலைத் தாக்குதல் அங்கி தொடர்பாக இதுவரை விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தாய்லாந்திலிருந்து லியனகேவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த மகிந்த

(கொழும்பு)

இலங்கைத் தொழிற் கட்சியின் தலைவரான ஏ.எஸ்.பி லியனகேக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கும் வகையில் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரம் ஒன்றின் அடிப்படையில் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் காலியில் இடம்பெறும் மே தின பேரணிக்கு வாழ்த்து தெரிவித்து தொழிற் கட்சி தலைவர் ஏ.எஸ்.பி. லியனகே பத்திரிகை ஒன்றின் முழுமையான பக்கத்தில் விளம்பரம் வெளியிட்டிருந்தார்.

அந்த பத்திரிகை விளம்பரத்தில்,

வேலை செய்யும் மனிதனின் மே தினம் ஒன்றை கொண்டாடுவதற்கு ஜனாதிபதியுடன் இணைந்து காலிக்கு வாருங்கள்,

நல்லாட்சி அதிகாரத்துடன் அச்சம், சந்தேகம் அற்ற நாட்டை வழங்கிய உலகை வென்ற ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டை கட்டியெழுப்ப வாருங்கள்,

“பொது மக்களின் பணத்தை திருடி அரசராகுவதற்கு பதிலாக மக்களுக்கு சேவை செய்து உண்மையான மக்கள் தலைவராக மரணிப்பதே கௌரவமாகும்” ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய வசனங்களுடனான இந்த விளம்பரத்தை பார்த்த மகிந்த ராஜபக்ஷ தாய்லாந்தில் இருந்து நேற்று மாலை ஏ.எஸ்.பி. லியனகேவுக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

“உனக்கு நான் எவ்வளவு உதவி செய்துள்ளேன்? நான் உன்னை தூதுவராக்கினேன். நீ என்னை இப்படியா கவனிப்பது. உனக்கு தெரியாது நான் யார் என்று. நான் உனக்கு என்ன செய்கின்றேன் என பார்த்து கொள்” என மிகவும் கீழ்த்தரமாகத் திட்டி அச்சுறுத்தியுள்ளார்.

அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷவின் ஊடக பேச்சாளரான ரோஹான் வெலிவிட்ட என்பவர் ஏ.எஸ். பி. லியனகேவுக்கு அழைப்பேற்படுத்தி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த அச்சுறுத்தல் காரணமாக லியனகே அச்சமடைந்து அரசாங்கத்தின் அமைச்சர, உறுப்பினர்களை அழைத்து தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

பீக்கொக் மாளிகையின் சொந்தக்காரரான லியனகேயிடமிருந்து அதனை பெற்றுக்கொள்ள மகிந்த முயற்சித்த போதும், அது கைகூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 704

Search for people, places and things
Nagendram Home

அச்சு




விஜி




சிந்து




மினு




நிஷாந்தன்




தர்மா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "துர்முகி வருஷ" இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

## வருடத்தின் முற்பகுதி வரவு பிற்பகுதி செலவு!



*வருடத்தின் முற்பாதி வரவு பிற்பகுதி செலவு!*

***நட்பு வட்டத்தைப் பெருக்கிக் கொள்ள பிரியப்படும் கும்ப இராசி நேயர்களே!***

மன்மத வருடம் முடிந்து துரமுகி வருடம தொடங்கயிருக்கிறது. இந்தப் புத்தாண்டு சந்தோஷங்களை அதிகம் சந்திக்க வைக்குமா?, சிந்தித்த காரியங்களில் ஜெயம் கிடைக்குமா? செல்வநிலையில் உயர்வு உண்டா? திடீர் மாற்றங்கள் ஏதேனும் வந்து சேருமா? சுபச் செய்திகள் கிடைக்குமா என்றெல்லாம் மனதில் ஆழ்ந்த சிந்தனைகள் வருடம் பிறக்கும் முன்பே பிறந்து விடும்.

பொதுவாக ஆண்டின் தொடக்கத்தில் குரு உங்கள் ராசியைப் பார்ப்பது யோகம்தான். தனலாபாதிபதியாக விளங்கும் வியாழன் வக்ர இயக்கத்தில் இருந்தாலும் கூட பார்வைக்கு பலன் அதிகம் உண்டு. எந்தவித இடர்பாடுகள் வந்தாலும் அவற்றை வந்த வழியே போகச் செய்வது குரு பார்வை தான்.

புத்தாண்டு பிறப்பு பங்குனி மாதம் 31-ந் தேதி மாலை நேரத்திலேயே நிகழந்திருக்கின்றது. அன்றையதினம் ராகுவிற்குரிய திருவாதிரை நட்சத்திரமும் கூடியதினம். உங்கள் ராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். வருடத் தொடக்க நாளில் அந்த புதன் சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார்.

சப்தமாதிபதி புதனோடு சூரியன் இணைவதால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். திருமணம் கை கூடும். மாமன், மைததுனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். சேமிப்புகள் உயரும். சிறுசிறு பிரச்சினைகளைக் கேது கொடுத்தாலும் குரு பார்வை இருப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

செவ்வாய்-சனி சேர்க்கை ஒரு முரண்பாடான கிரக சேர்க்கையாகும். இது அவ்வளவு நல்லதல்ல. 3, 10-க்கு அதிபதியானவர் செவ்வாய் ராசிநாதன் மற்றும் 12 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சனி. இந்த இரண்டு கிரகங்களும் தொழில் ஸ்தானத்தில் இணைந்து சஞ்சரிப்பதால் வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். கூட்டாளிகளை நம்பிச் செய்த சில காரியங்கள் கடைசி நேரத்தில் கைகயை விரித்து விடுவர். பத்திரப்பதிவல் கூடுதல் கவனம் செலுத்துவேது நல்லது. விரயாதிபதியும், தொழில் ஸ்தானாதிபதியும் இணைந்திருப்பதால் தொழிலில் விரயங்கள் அதிகரிக்கும்.

பயணங்களால் பலன் கிடைக்காமல் போகலாம். தூரதேசம் சென்றவர்கள் தொடர்ந்து அங்கிருந்தும் வேலை கிடைக்கவில்லையே என்று வீடு திரும்பும் சூழ்நிலை உருவாகலாம்.

இதுபோன்ற கிரக சேர்க்கை ஏற்படும் நேரத்தில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். செவ்வாய்க் கிழமை தோறும் விரதமிருந்து அங்காரகனை வழிபட்டு வருவதன் மூலமும், வடக்கு நோக்கிய அம்பிகை வழிபடுவதன் மூலமும் வாய்ப்புகளை வரவழைத்துக்கொள்ள இயலும். அதே நேரத்தில் சனியையும் வழிபாடு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் சிவாலயத்திற்கு சென்று சனிபகவான் சன்னிதியில் எள் தீபம் ஏற்றி வழிபாடு செய்வது நல்லது. சிறப்பு வழிபாடாக வைத்தீஸ்வரன் கோவில் மற்றும் திருநள்ளாறு சென்றுவழிபட்டு வரலாம்.

ஜென்ம ராசியில் கேது இருப்பதால் சில காரியங்களை ஒரு முறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். உத்தியோகத்தில் இலாகா மாற்றங்கள் உருவாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி 17 வரை!**

இக்காலத்தில் உலாவரும் கிரக நிலைகளின் அடிப்படையில் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருப்பது ஒருவழிக்கு நன்மையாகவும் இருக்கும். காரணம் சனி உங்கள் ராசிக்கு அதிபதியாக மட்டுமல்ல 12 ஆம் இடத்திற்கும் அதிபதியாகின்றார்.

விரயாதிபதி வக்ரம் பெறும்பொழுது சில நல்ல நிகழ்வுகளும் இல்லத்தில் நடைபெறும். குறிப்பாக சுப விரயங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பாகப் பிரிவினையில் ஏற்பட்ட தாமதங்கள் அகலும்.

ரண சிகிச்சை செய்து தான் குணமாக வேண்டுமென்று சொல்லிய மருத்துவர்கள் சாதாரண மருந்து மாத்திரைகளிலேயே உங்கள் ஆரோக்கியத்தைச் சரிப்படுத்தி விடுவர். சந்திர பலம் நன்றாக இருக்கின்றது. எனவே எதிர்ப்புகள் அகலும். உறவினர் பகை மாறும்.




புத ஆதித்ய யோகம் இருப்பதால் கல்விக்காக எடுத்த முயற்சி கை கூடும். அரசியல் மற்றும் பொதுநலத்திலிருப்பவர்கள் பழைய பொறுப்புகளிலிருந்து விடுபடுவர். புதிய பொறுப்புகள் வந்து சேரும். தொழிலில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக உச்ச சுக்ரன் உங்களுக்கு நன்மைகளை வழங்கும். அள்ளிக் கொடுக்கும். அசுர குருவான சுக்ரன் தன ஸ்தானத்தில் அல்லவா சஞ்சரிக்கின்றார். எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். திடீர் திடீரென வரவு வந்து கொண்டேயிருக்கும். ஒரு சில சமயங்களில் பண நெருக்கடிக்கு ஆளாகவும் நேரிடும். இருப்பினும் நண்பர்களின் ஒத்துழைப்பும், தக்க சமயத்தில் கைகொடுக்கும்.

அரசு வழி சலுகைகள் வருவதில் தாமதப படலாம். ஆயினும் குரு வக்ர நிவர்த்திக்குப் பின்னால் படிப்படியாக ஒவ்வொன்றும் நடைபெறத்தொடங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். பொதுவாக குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் முழுமையான பலன் கிடைக்கும். மேல்படிப்பை முன்னிட்டுக் குழந்தைகள் வெளிநாடு செல்ல விரும்பினால் அதற்காக நீங்கள் செய்த முயற்சியில் உடனடிப் பலன் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களை பரிசீலித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**ஆடி 18-க்கு மேல் அதிக விழிப்புணர்ச்சி தேவை!**

துரமுகி வருடம் ஆடிமாதம் 18 ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைத்தால், அதிக விழிப்புணர்ச்சி உங்களுக்கு தேவைப்படும் நேரமாகும். எந்தச் செயலைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. தன்னம்பிக்கையும், தைரியமும் குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது. மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை கூடிக் கொண்டே செல்லும். கோபத்தைக் குறைத்துக் கொண்டால் மட்டுமே குதூகலத்தை வரவழைத்துக்கொள்ள இயலும்.

இதுபோன்ற காலங்களில் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக முன்கோபமும் இருகக்கும். எனவே, எதையும் ஆராய்ந்து நிதானமாக செய்வது நல்லது. பிறரை விமர்சிப்பதன் மூலம் பிரச்சினைகள் அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். கூடயிருப்பவர்களாலும், குடும்பத்தினர்களாலும் விரயங்கள் கூடிக்கொண்டே போகும். திடீர் இடமாற்றங்களை ஏற்றுக் கொள்ள இயலாத சூழ்நிலை உருவாகும். உடல் ஆரோக்கியத்தில் தொல்லையும், உறவினர் பகையும் அதிகரிக்கும்.

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பார்க்கும் இடங்களெல்லாம் புனிதமடையும். எனவே 2, 4, 12 ஆகிய இடங்களுக்குரிய ஆதிபத்தியங்கள் சிறப்பாக நடைபெறும்.

"இரண்டினை குருதான பார்த்தால் லாபங்கள் வந்து சேரும்" என்பர். 2 ஆம் இடத்தை குரு பார்க்கும் பொழுது தொழிலில் லாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். பணநெருக்கடி அகலும். குடும்பத்திலிருந்த கருத்து வேறுபாடுகள் ஓரளவு குறையும். கடுமையாக முயற்சித்தும நடைபெறாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். வாழ்க்கைத் துணை வழியே வருமானம் வந்து சேரும்.

"நான்கினை குருதான் பார்த்தால் நலம் யாவும் வாய்க்கும்" என்பர். எனவே, தாய் வழி ஆதரவு பெருகும். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பத்திரப்பதிவிலிருந்த தடை அகலும்.


பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பொருளாதார நெருக்கடி அகல புதிய கூட்டாளிகள் வந்திணைவர். வாகனம் வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. நீண்டதூரப் பயணங்கள் நிகழ்கால தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அமையும்.

"பனிரென்டை குருதான் பார்த்தால் பயணத்தால் பலன் கிடைக்கும்". எனவே 12 ஆம் இடத்தைக் குரு பார்க்கும் பொழுது திடீர திடீரென பயணங்கள் வந்து கொண்டேயிருக்கும். அந்நிய தேசத்திலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள முன்வருவீர்கள்.

முன்னோர்கள் கட்டிய கோவிலை மீண்டும் புதுப்பித்துக் குடமுழுக்கு விழா செய்யும் வாய்ப்புக் கூட ஒருசிலருக்கு கைகூடி வரலாம். வியாபாரப் போட்டிகள் அகலும். பெற்றோர்களின் மணி விழா மற்றும் பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகளுக் காகவும் செலவிட்டு மகிழ்வீர்கள்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துரமுகி வருடத்தில் கும்ப ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத்தொடக்கத்தில் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும். உதவுவதாக சொன்ன உறவினர்கள் உண்மையிலேயே வீடு தேடி வந்து உதவுவர். ஆச்சரியமூட்டும் சம்பவங்கள் அதிகமாக நடைபெறும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும், ஒற்றுமை பலப்படும். காலம் கடந்தும் கல்யாணம் முடியவில்லையே என்ற கவலை நீங்கும். பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. உங்கள் பெயரிலேயே வீடு வாங்க உடன் இருப்பவர்கள் ஒத்து வருவர்.



குருப்பெயர்ச்சிக்குப் பிறகு விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றச் சிந்தனை மேலோங்கும். பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு ஊர் மாற்றம் ஏற்படும். வராஹி வழிபாடும், நந்தி வழிபாடும் நாகசாந்திப் பரிகாரமும் நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும்.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல்கள் அதிகரிக்கலாம். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்காது. மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்தாலும் மற்றவர்கள் உங்களை கண்டு கொள்ள மாட்டார்கள். தன விரயம் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு நம்பிக் கொடுத்த தொகை மீண்டும் கைக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சனியின் சஞ்சார காலத்தில் உடல் ஆரேக்கியத் தொல்லை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

கூட இருப்பவர்களாலும் அலைச்சல், குடும்ப உறுப்பினர்களாலும் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் புதிய பங்குதாரர்கள் கூட முறையாக நடந்து கொள்ள மறுப்பர். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலை மேலோங்கும்.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானை வழிபடுவது நல்லது. அமாவாசை தினத்தில் முன்னோர் வழிபாட்டையும், பௌர்ணமி நாளில் கிரிவலம் வருவதன் மூலமும் வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ளலாம்.

**நாளை மீனம்...**

# பதிவுகளை மேற்கொள்ளாது 5 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு சட்டவிரோத பயணம்?

## அமைச்சர் தலதா தகவல்



சுமார் 5 இலட்சம் இலங்கையர்கள் தமது தொழில் நிமித்தம் பதிவுகள் செய்யாமல் சட்டவிரோதமான முறையில் நாட்டைவிட்டு சென்றிருக்கலாமென வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் தலதா அத்துகோரள நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் பற்றிய திருத்தமான தரவுகள் இல்லாமையினால் பணியாளர்களதும் இலங்கையில் வாழும் குடும்பத்தாரினதும் நலன் குறித்து அக்கறை செலுத்துவதில் தாம் பாரிய சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாடு செல்வோரின் தரவுகளை சேகரிக்கும் வகையில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட பதிவு முறைமை நான்கு மாதங்களாகியும் வெற்றியளிக்காமை கவலைக்குரிய விடயமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் 17 இலட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் குறித்த தகவல்களை பதிவுசெய்யுமாறு இலங்கையல் வாழும் உறவினர்களை நாம் கேட்டிருந்தோம். இருந்த போதிலும் 95 ஆயிரம் பேர் மாத்திரமே இதில் பதிவு செய்துள்ளனர்.

இந்த பதிவுகளுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த காலக்கெடு நீக்கப்பட்டுள்ளது. புதிய காலக்கெடு இது வரை தீர்மானிக்கப்படாததால் சட்டபூர்வமாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ வெளிநாடுகளுக்குச் சென்றோர் பற்றிய தகவல்களை இயலுமானவரை விரைவில் பதிவு செய்யுமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

முறைப்படி தம்மை பதிவு செய்து கொள்ளாமல் வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாக செல்வோர் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் பற்றிய தகவல்கள் இல்லாமையினால் எம்மால் அவர்களுக்கு உதவ முடியாமல் உள்ளது. எனவே துணை முகாமையாளர் ஒருவருடன் செல்வதாக இருந்தாலும் தவறாமல் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் வலியுறுத்தினார்.

அத்துடன் சவுதி அரேபிய அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் இலங்கைப் பணியாளர்களுக்கு ஆகக் கூடிய சம்பளமாக 300 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம், ஏற்றுமதி, வெளிநாட்டுக் கையிருப்பு ஆகியன நிறைவை அடைந்ததும் வெளிநாட்டுக்கு பணிப்பெண்களாக செல்வோரின் எண்ணிக்கையை வெகுவாக குறைக்கும் வகையில் பயிற்சி பெற்றவர்களை மாத்திரம் எல்லா நாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## போதைப்பொருள் குறிப்புப் புத்தகத்தில் 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் பதிவு

(கொழும்பு)

போதைப்பொருள் விற்பனை பணம் கொடுக்கல் வாங்கல் குறிப்புப் புத்தகத்தில், 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலையுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் பிரதான சந்தேக நபரான தெமட்டகொட சமிந்த என்பவரின் நிதியை முகாமைத்துவம் செய்பவர் என்று கூறப்படும் ஒருவர், நாரஹேன்பிட்டியவில் வைத்து கடந்த 25ஆம் திகதியன்று கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து, அன்றைய தினம் 5கிராமுக்கு மேல் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. அதுமட்டுமன்றி சந்தேக நபரிடமிருந்து, நவீன ரக அலைபேசிகள் எட்டும் குறிப்புப் புத்தகமொன்றும் கைப்பற்றப்பட்டது. அந்த குறிப்பு புத்தகத்தில், சிறைச்சாலை அதிகாரிகளுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பதியப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது. (இ-5)

## 15 மில்லியன் ரூபாய் செலவில் யாழில் கைப்பணிப் பயிற்சிகள்

பனை அபிவிருத்தி சபையால் இந்த வருடம் 15 மில்லியன் ரூபாய் செலவில் 450 பயனாளிகளுக்கு பனம் கைப்பணிப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபை தலைவர் மா.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனம் கைப்பணியாளர்களுக்கு பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இந்த வருடம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், புத்தளம், அம்பாந்தோட்டை, வவுனியா, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு இடமும் திருகோணமலை மாவட்டத்தில் 3 இடமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 இடமும் தெரிவு செய்யப்பட்டு அதில் ஒவ்வொரு பிரதேச செய லர் பிரிவினூடாகவும் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பனை ஓலை, ஈர்க்கு, நார் போன்ற கைப்பணிப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பிள்ளையானின் விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கத்தின் படுகொலை தொடர்பான சந்தேக நபர்களின் விளக்கமறியல் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட நான்கு பேர் மீதான வழக்கு நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ். கணேசராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 11ம் திகதி குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப புலிகளின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா மற்றும் கஜன் மாமா எனப்படும் ரெங்கசாமி கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வை சேர்ந்த எம். கலீல் ஆகியோரே இக் கொலை தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களாவர்.

அதே நேரம் சிவநேசதுரை சந்திரகாந்தன் தன்னை பிணையில் செல்ல அனுமதி கோரி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் பிணை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இம் மனு மீதான விசாரணையும் நாளை மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் இடம் பெறவுள்ளது.

2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது தேவாலயத்திற்குள்ளேயே முன்னாள் நாடாளுமன்ற உறுபபினரான ஜோசப் பரராஜசிங்கம் அடையாளந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-5)

## கைக்குண்டுகளுடன் நபரொருவர் கைது

பொரளை மைதானத்துக்கு அருகில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே நேற்றுமுன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை சந்தேக நபரை புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொரளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## வாக்குக்கு பணம் கொடுப்பதை தடுக்க தமிழகத்தில் 21300 இளைஞர் குழுக்கள்

### தேர்தல் ஆணையம் அதிரடி

தேர்தலில் வாக்குப்போட கட்சிகள், பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்க, 21 ஆயிரத்து, 300 இளைஞர் குழுக்களை, தேர்தல் ஆணையம் தயார் செய்துள்ளது. இதனால், இம்முறை வாக்காளர்களுக்கு, பணம் மற்றும் பரிசு பொருட்கள் சென்று சேர்க்கப்படுவதில் கட்சிகளுக்கு கடும் கஷ்டம் ஏற்படும் என்று தெரிகிறது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி சென்னையில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது, அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு வாகனங்களில் ஆட்களை அழைத்துச் செல்லக் கூடாது என்று 5 நாட்களுக்குள் உத்தரவுபோட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை ஏற்று, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படும் எனத் தெரிவித்தார். (இ-5)

## ஆவணக் காப்பகத்தின் 32வது நிகழ்வு 1ம் திகதி

(யாழ்ப்பாணம்)

ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 32 ஆவது நிகழ்வாக படைப்பாளி ஜெவ்றே பீலிங் என்ற தலைப்பில் டெபேறாபிலிப் உரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கையின் புகழ்பெற்ற 43 குழுவைச் சேர்ந்த மூத்த ஓவியர்க ளுள் ஒருவரான பீலிங் பற்றி வரலாற்றாசிரியரான டெபோறா பிலிப் உரையாற்றுகின்றார்.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகம், 199, கோவில் வீதி,நல்லூரில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலை மற்றும் சினிமா ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன் பெறமுடியும். (இ)

## தமிழ் அமுதம்-4 வள்ளுவர் விழா

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம்-04 வள்ளுவர் விழா சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க் கோட்டத்தில் (கம்பன் கல்லூரி வளாகம்) எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

மேலும் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரட்ணம் தலைமையுரையையும் நா.நவராஜ் உள்ளத்து அனையது உயர்வு எனும் பொருளில் எழிலுரையையும் ஆற்றவுள்ளனர்.

மேலும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராகத் திகழும் விவாத அரங்கும் நடைபெறும். என்றும் பொருந்தி நிற்கும் வள்ளுவ இலக்கணம் **காதல் இலக்கணமே! அரச இலக்கணமே! துறவு இலக்கணமே!** எனும் பொருள்பட முறையே ந.நாகேஸ்வரனும் பேராசிரியர் தி.வேல்நம்பியும் ந.விஜயசுந்தரமும் வாதிடவுள்ளனர். (இ

## வெறும் குழாயே மீட்பு

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து வெடி பொருட்கள் அடங்கியதாக சந்தேகிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கலனில் எவ்வித வெடிபொருட்களும் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாகர்கோவில் மேற்குப் பகுதியில் உள்ள இராசையா இரவிச்சந்திரன் என்பவர் தமது வீட்டில் கோழிக்கூட்டினை வைப்பதற்காக நேற்று முன்தினம் குழி ஒன்று தோண்டிய வேளையில் பிளாஸ்ரிக் குழாய் வடிவிலான பொருள் ஒன்று தென்பட்டது. இதற்குள் வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸாரினால் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையினரால் அங்கு சென்று அப்பிளாஸ்ரிக் குழாயினை திறந்து பார்த்தபோது அதற்குள் எதுவும் காணப்படாது வெறும் குழாயாகக் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# தமிழ் சினிமா வரலாறு

## 149 நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது எம்.ஜி.ஆரின் கால் எலும்பு முறிந்தது

வலி கடுமையாக இருந்த போதிலும் அதைத் தாங்கிக்கொண்டு மேடையில் அமர்ந்தவாறே எம்.ஜி.ஆர் பேசினார். எதிர்பாராதவிதமாக கால் எலும்பில் முறிவு ஏற்பட்டுவிட்டது.

தொடர்ந்து நடிக்க முடியாத நிலையில் இருப்பதற்காக வருந்துகிறேன். விரைவில் குணம் அடைந்து இந்த நாடகத்தை மீண்டும் உங்கள் முன் நடத்துவேன் என்று கூறினார்.

எம்.ஜி.ஆருக்கு கால் எலும்பு முறிந்ததை அறிந்து ரசிகர்கள் கண்ணீர்விட்டு அழுதனர். அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு காரில் சென்னைக்குப் புறப்பட்டார்.

இதற்குள் எம்.ஜி. ஆருக்கு விபத்து ஏற்பட்ட செய்தி சென்னைக்கு எட்டிவிட்டது. அவர் வீட்டு முன் பெரும் கூட்டம்.

சென்னை திரும்பிய எம்.ஜி.ஆர். எனக்கு ஒன்றும் நேராது. கவலைப்படாதீர்கள் என்று ஆறுதல் கூறிவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றார்.

அங்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. கால் எலும்பு அடியோடு முறிந்துவிடவில்லை என்றும் விரிசல்தான் ஏற்பட்டிருக்கிறது என்றும் சிகிச்சை மூலம் சரி செய்துவிடலாம் என்றும் வைத்தியர்கள் கூறினர்.

சில நாட்கள் அசையாமல் படுக்கையில் இருக்க வேண்டியது அவசியம் என்றும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அதன்படி வைத்திய சாலையில் எம்.ஜி.ஆர். அனுமதிக்கப்பட்டார்.

எம்.ஜி.ஆர். கால் எலும்பு முறிந்து விட்டதால் அவர் குணம் அடைந்தாலும் முன்போல் சண்டைக்காட்சிகளில் நடிக்க முடியாது என்று தமிழ்நாடு முழுவதும் வதந்தி பரவியது.

இதனால் எம்.ஜி.ஆர். அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் கூறியிருந்ததாவது:-



"மன்னாதி மன்னன்" படத்தில் பத்மினியுடன் போட்டி நடனம்.

என் உடல் நலம் குறித்து அக்கறையோடு விசாரிக்கும் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு வர இருந்த பேராபத்து உதய சூரியனைக் கண்ட பனித்துளிபோல விலகிவிட்டதற்கு முக்கிய காரணம், உங்களைப் போன்ற ரசிகர்களின் அன்பும் ஆசியும்தான்.

என் உடல் நலம் தேறிய பின் நான் இதுவரை இருந்ததைவிட பன்மடங்கு அதிக சக்தியுடனும் தெம்புடனும் மீண்டும் கலைக்கும் நாட்டுக்கும் பணியாற்றுவேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருந்தார்.

அவர் கூறியதுபோலவே விரைவாக குணம் அடைந்தார். விரிசல் ஏற்பட்ட எலும்பு சரியாகியது. முன்னிலும் அதிக வலிமை பெற்றார். நிருபர்கள் முன்னிலையில் அவர் பெரும் பளுவைத் தூக்கிக் காட்டினார். நடையில் எவ்வித மாற்றமுமில்லை. வேகம் சற்று கூடியிருந்தது!

### தாய் மகளுக்கு கட்டிய தாலி

நாடோடி மன்னனுக்குப் பிறகு எம்.ஜி. ஆர். நடித்த படம் தாய் மகளுக்குக் கட்டிய தாலி. அறிஞர் அண்ணா எழுதிய கதை. வசனத்தை அரங்கண்ணல் எழுதினார்.

ஒளிப்பதிவாளர் ஆர்.ஆர். சந்திரன் கல்பனா கலாமந்திர் என்ற சொந்தப் படக் கம்பெனியைத்தொடங்கி அவரே டைரக்ட் செய்த படம். (தொடரும்)

# குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை



உண்மையில், மைத்திரிபால சிறிசேன, தான் சார்ந்த சிங்கள சமூகத்தால் 'துரோகி' என்கின்ற முத்திரையைக் குத்த விரும்பவில்லை. இது இந்தியாவின் மத்திய அரசாங்கத்திற்கும் பொருத்தமானதாகும்.

**இவ்வாறு Eurasia Review ஊடகத்தில், DR. ABDUL RUFF எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளார் நித்திய பாரதி.**

குற்றங்கள் இழைத்தவர்கள் தமது தவறை உணரும் போது மட்டுமே மீளிணக்கம் என்பது வெற்றியளிக்கும். எந்தவொரு காரணங்களுக்காகவும் சிறுபான்மையினருக்கு எதிராக குறித்த நாட்டின் அரசாங்கத்தால் குற்றம் இழைக்கப்படும் போது அங்கு போலியான மீளிணக்கப்பாடு மேற்கொள்ளப்படுமிடத்து சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியாது. தென்னாசியாவின் தீவான இலங்கையில் நல்லிணக்க முயற்சி இன்னமும் வெற்றி பெறவில்லை என்பதை இங்கு நோக்க முடியும்.

இந்தியா போன்று, இலங்கை தனது சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிராகக் குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த குற்றங்களுக்கு பொறுப்பளிப்பது போல் தெரியவில்லை.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு பிரச்சினைகளை மறந்து சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கி அவர்களைப் பெரும்பான்மை சமூகமான சிங்களவர்களுடன் இணைத்து நாட்டை வழிநடாத்திச் செல்வதற்கான முயற்சியை இலங்கை அரசு முன்னெடுக்கவில்லை.

இலங்கை தொலைக்காட்சி சேவைகளைப் பார்க்கின்ற மற்றும் ஊடகங்களில் வருகின்ற செய்திகளை வாசிக்கின்ற எவரும் இலங்கையின் அரசாங்கமும் பெரும்பான்மை சமூகமும் தமிழ் மக்களையும் சிறுபான்மை சமூகங்களையும் எவ்வாறு பார்க்கின்றனர் என்பதைத் தெட்டத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். அதாவது இலங்கை அரசாங்கமும் பெரும்பான்மை சிங்களவர்களும் தமிழ் சமூகம் உட்பட சிறுபான்மை சமூகங்களை ஒரு பிரச்சினையாகவே நோக்குகின்றன.

ராஜபக்ஷ அரசாங்கத்தாலும் இலங்கை இராணுவத்தாலும் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் இலங்கையின் பெரும்பான்மை சமூகமும் அரசாங்கமும் எவ்வித அனுதாபத்தையும் காண்பிக்கவில்லை. இந்த அடிப்படையில் 'பயங்கரவாதத்திற்கு' எதிரான யுத்தம் என்கின்ற பெயரில் இலங்கையின் பெரும்பான்மை அரசானது சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பல்வேறு மீறல்களை இழைத்த போதிலும் இவ்வாறான மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு முன்வரவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற மனிதாபிமானத்திற்கு எதிரான போர்க் குற்றங்கள் மிகப் பாரியதொரு பிரச்சினையாகும். இவ்வாறான மீறல்களில் ஈடுபட்டவர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு உடனடியாகத் தண்டனை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்காவும் இலங்கையைக் கோரியுள்ளன.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ் மக்களுடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக உறுதியளித்த போதிலும், குற்றவாளிகளைக் கைது செய்து தண்டனை வழங்குவது தொடர்பில் எவ்வித முன்னேற்றகரமான நகர்வையும் எடுக்கவில்லை.

ஏனெனில் ராஜபக்ஷவும் பெரும்பான்மை சிங்கள சமூகத்தவர்களும் தமது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் தண்டனை பெற்றுக் கொடுப்பதை விரும்பவில்லை.

உண்மையில், சிறிசேன தான் சார்ந்த சிங்கள சமூகத்தால் 'துரோகி' என்கின்ற முத்திரையைக் குத்த விரும்பவில்லை. இது இந்தியாவின் மத்திய அரசாங்கத்திற்கும் பொருத்தமானதாகும். அதாவது வரலாற்று முக்கியத்துவம் மிக்க பாபர் மசூதியை அழித்த இந்துத்துவக் குற்றவாளிகளைக் கைதுசெய்தால் இந்து மதத்தவர்கள் மத்தியில் 'துரோகி' என்கின்ற அவப் பெயரைச் சந்திக்க வேண்டி வரும் என இந்திய மத்திய அரசாங்கம் கருதுகிறது. (தொடரும்)

நம்பிக்கையோடு போராட்டத்தைத் தொடங்கு.
அர்ச்சுனா, எழுந்து நில் ...! போராடு!
- பகவத்கீதை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கூட்டமைப்புத் தலைமை என்ன செய்யப் போகிறது?

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட முன்வரைபு ஒன்றை தமிழ் மக்கள் பேரவை தயாரித்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவை தீர்வுத்திட்ட வரைபை தயாரிப்பதைக் கண்ட வடக்கு மாகாண சபை தானும் ஒரு தீர்வுத்திட்டத்தை தயாரித்து முன் வைத்துள்ளது.

இத் தீர்வுத்திட்டத்தை எதிர்வரும் 30ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் கேள்வி.

இதே சமயம் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்ட முன்வரைபை இலங்கை அரசு பரிசீலிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

ஆக, வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவது எங்ஙனம்? இதை அமுல்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன?

வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டவுடன் அதை அரசு செய்யுமா? என்ற கேள்விகள் எழுகின்ற போது எதுவுமே நடக்காது என்பது பதிவாகிறது.

அப்படியானால் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன என்பதே இன்றைய பேசுபடு பொருளாகும்.

வடக்கு மாகாண சபையைக் கொண்டு தீர்வுத்திட்டத்தை தயாரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதை அமுல்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதைச் செய்யாமல் பேசாமல் இருந்தால், தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்டத்துக்கு பதிலடியாக வடக்கு மாகாண சபையைக் கொண்டு தீர்வுத்திட்டத்தை தயாரித்தமையேயன்றி இந்த தீர்வுத்திட்டத்தை எல்லாம் அரசு ஏற்கப்போகிறதா என்ன என்று கூட்டமைப்பே கேட்பதாக நிலைமை மாறிவிடும்.

இத்தகையதோர் நிலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமல்ல; வடக்கு மாகாண சபைக்கும் அவப்பெயரை ஏற்படுத்தி விடும்.

ஆகையால், வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டத்தை இலங்கை அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும். இதை அரசு செய்ய தவறினால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்வோம்; பாராளுமன்றத்தில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்வோம்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவியை இராஜினாமா செய்து பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் தேவையில்லை நாங்கள் பிரிந்து செல்கிறோம் என்று உலகுக்கு எடுத்துரைப்போம். இப்படியாக அதட்டல்கள் வெருட்டல்கள் செய்யப் பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதைச் செய்யுமா என்பதை தமிழ் மக்கள் அனுமானிக்கத் தெரியாதவர்கள் அல்லர்.

எதுவாயினும் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டத்தை அரசு அமுல்படுத்தாவிட்டால் வடக்கு மாகாண சபையினர் தொடர் போராட்டங்களை நடத்துவர் என நம்பலாம்.

இதை அவர்கள் செய்யா விட்டாலும் அவர்களும் பேரவைக்காக குந்தியிருந்து எழுதியது இந்த தீர்வுத்திட்டம் என்பதாக நிலைமை முடிந்து போகும்.

# இளைஞர்களால் இடையூறு

கோண்டாவில் வடக்கு வீரபத்திரர் ஆலய மண்டபத்தை அண் மித்த பகுதியில் தினம் கூடும் இளைஞர்களால் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதாக குறித்த பகுதியில் உள்ள பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பகுதியில் தினமும் காலை வேளையிலும் இரவு வேளை 9 மணியளவிலும் ஒன்றுகூடும் இளைஞர்களால் பல சமூக விரோ தச் செயல்கள் நடைபெற்று வருவதாகவும் இவற்றைத் தட்டிக் கேட்போர் மீது அச்சுறுத்தல்களும் விடுக்கப்படுகிறது.

இச்செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இதனால் ஆலயத்தின் புனிதத் தன்மை பாதிக்கப்படுவதோடு குறி த்த பகுதியால் செல்லும் பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் பல இடையூறுகளுக்கு உள்ளாகின்றனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த பகுதியில் சமூக விரோதச் செயல் களை தடுப்பதற்கு பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்ததுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

# தம்பி தாக்கியதில் அண்ணனுக்கு காயம்

அண்ணன் தம்பிக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையில் முடிந்தது.

இதில் அண்ணன் காயமடைந்தநிலை யில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம், கச்சாய் வாழையடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்துமேலும் தெரியவருவதாவது,

தம்பி நீண்ட நேரமாக தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்ததை அவதானித்த அண்ணன் யாருடன் இப்படி இவ்வளவு நேரமாக கதைத்துக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டதற்கு ஆத்திரமடைந்த தம்பி அருகில் கிடந்த பொல்லினால் அண்ணனின் தலையில் அடித்துள்ளார்.காயமடைந்த அண்ணன் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-89)

# கபீர் ஹசீம் உள்ளிட்ட எழுவருக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் கபீர் ஹசீம், தேர்தல் ஆணையத்தின் தலைவர் மகிந்த தேசப்பிரிய உள்ளிட்ட பிரதிவாதிகள் 7 பேரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உயர் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

அமைச்சர் சரத் பொன்சேகா ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதை ரத்து செய்யுமாறு கோரி தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி அஜித் பிரசன்ன தாக்கல் செய்திருந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு மீதான விசாரணை மீண்டும் எதிர்வரும் மே மாதம் 24-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொளளப்படவுள்ளமை குறிபபிடத்தக்கது. (இ-5)

# தலைமன்னாரில் 26 கி.கிராம் கஞ்ஸ் போதைப்பொருள் மீட்பு

தலைமன்னார் காட்டு பகுதியில் மறைத்து வைக்கபட்டிருந்த நிலையில் கங்ஸ் என அழைக்கப்படும் ஒரு வகை போதைப் பொருளை தலைமன்னார் கடற்படையினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மீட்டுள்ளனர்.

இதன்போது 26 கிலோ கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டு நேற்று பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எனினும் அது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. குறித்த போதை பொருளை மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2,3,281)

# வழி அனுமதியைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மரக்காலை உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் குடாநாட்டில் இயங்கி வருகின்ற மரக்காலைகளில் பொதுமக்களால் கொள்வனவு செய்யப்படும் மரங்களுக்கான அனுமதிப் பற்றுச்சீட்டுக்களுக்கான வழி அனுமதியை மரக்காலைகள் அமைந்துள்ள அந்தந்த பிரதேச செயலகங்களில் இன்று முதல் பதிவு செய்து கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மரக்காலை உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வ.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையிலான கலந்துரையாடலின் போது இவ் அனுமதி பெறப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்


வடமராட்சி வலயக் கல்வி அலுவலக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப கற்கை நிலையத்தால் நடத்தப்படவுள்ள NVQ Level -3 (Computer Application Assistant) கற்கை நெறிக்கு பின்வரும் தகைமையுடையோர் விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த. (சா/த) இல் ஆங்கிலத்தில் S சித்தியேனும் பெற்றிருக்க வேண்டும், க.பொ.த (உ/த) கற்றிருந்தால் முன்னுரிமை வழங்கப்படும், 18 வயதிற்கு மேற்பட்டவராக இரு த்தல் வேண்டும்.

புலோலி மெ.மி.த.க. பாடசாலை யில் அமைந்துள்ள நிலையத்திற்கு வாரநாட்களில் பிற்பகல் 2 மணிக்கு முன் சமுகமளித்து விண்ணப்பப் படிவங்களை பெற்று 02.05.2016 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு கணனி வள நிலைய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்பு வைத்தகுளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பிள்ளையாரை ஏன் வீதியோரங்களில் வைத்து வழிபடுகிறோம்?

ஏனைய தெய்வங்களைப் போல் அல்லாமல், பிள்ளையாரை மட்டும் வீதி ஓரங்களிலும் மரத்தடிகளிலும் கூட வைத்து வழிபடுகிறோமே... அது சரியா? அவரை தலையில் குட்டிக் கொண்டு வணங்குவதன் தாத்பர்யம் என்ன?

"பிள்ளையார் ஏழை எளியவர்களுக்கெல்லாம் அருள் செய்யும் எளிய சுவாமி. மஞ்சள் பொடியிலும், களிமண்ணிலும், வெல்லத்திலும்கூட பிள்ளையார் பிடித்து வழிபட சாஸ்திரம் அனுமதிக்கிறது. சொல்லப்போனால் வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே நைவேத்தியம் செய்யலாம்.

அந்த அளவுக்கு எளிமையான சுவாமி பிள்ளையார். அவரை வழிபட நாம் நிறைய சாஸ்திரம் படிக்கவேண்டும் என்பதில்லை. ஒன்றும் படிக்காதவனுக்குக் கூட அவர் கூப்பிட்ட உடனே வந்துவிடுவார்.

ஏனைய சுவாமிகளை நாம் தரிசனம் செய்வது என்றால், நாம் அதற்காக ஒரு காலம் பார்த்து நேரம் பார்த்து, குளித்து முழுகி, அர்ச்சனை பொருட்கள் வாங்கிக் கொண்டு கோயிலுக்குப் போகவேண்டி இருக்கிறது. போனாலும் நேரே சுவாமியிடம் போய்விடமுடியாது. பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டு போகவேண்டும். அப்படியும் சுவாமிக்கு ரொம்பவும் பக்கத்தில் போய்விடமுடியாது. கொஞ்சம் தள்ளித்தான் நிற்கவேண்டும்.

ஆனால், பிள்ளையார் அப்படி இல்லை.வீதி ஓரத்திலும் மரத்தடியிலும்கூட அவர் அமர்ந்துகொண்டிருக்கிறார். அருகில் போய் கும்பிடலாம். அலுவலகத்திற்கோ, கடைக்கோ, பாடசாலைக்கோ போகிற வழியிலும்கூட அவரை தலைநிமிர்ந்து பார்த்து வணங்கலாம். அதிலேயே நமக்கு சொல்லத் தெரியாத சந்தோஷம் உண்டாகிவிடும். அவர் எளிய குழந்தை வடிவமான சுவாமி.


பிள்ளையார் வழிபாட்டுக்கென்றே சில அம்சங்கள் இருக்கின்றன. சிதறு தேங்காய் போடுவது, நெற்றியில் குட்டிக் கொள்வது, இரண்டு கைகளை குறுக்காக மறித்து இரண்டு காதுகளையும் பிடித்துக் கொண்டு, முட்டிக்கால் தரையில் படுகிற மாதிரி தோப்புக்கரணம் போடுவது ஆகியவை பிள்ளையார் வழிபாட்டில் அடங்கி இருக்கின்றன.

யோக சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே நாம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால், எப்படி மனதையும் நல்லதாக மாற்றிக்கொள்ளலாம் என்று வழி சொல்லப்பட்டு இருக்கிறது. நம்முடைய உடம்பை பல தினுசுகளாக வளைத்துச் செய்கிற அப்பியாசங்களினால், சுவாசத்தின் போக்கில் உண்டாக்கிக் கொள்கிற மாறுதல்களால், நம்முடைய உள்ளம் உயருவதற்கான வழி அந்த யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.நெற்றிப் பொட்டில் குட்டிக்கொள்வது, தோப்புக்கரணம் போடுவது இவற்றால் நம்முடைய நாடிகளின் சலனம் மாறும் மனதில் தெய்வீகமான மாறுதல்கள் உண்டாகும். நம்பிக்கையுடன் செய்தால் அதற்கு நிச்சயமாகப் பலன் தரும்.

# திருநெல்வேலி சி.சியை வீழ்த்தி சொந்த தொடரை வென்றது கே.சி.சி.சி



சிறந்த களத்தடுப்பாளர் ஜனுதாஸ்



கே.சி.சி.சி



சிறந்த பந்து வீச்சாளர் பிரபாலன்



திருநெல்வேலி சி.சி.



ஆட்டநாயகன் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரர் ராகுலன்





கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 1991 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து23 வருடங்களாக நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின்இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை 21. 04. 16 அன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கே.சி. சி.சி. அணி திருநெல்வேலி சி.சி. அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்தை தன தாக்கிக் கொண்டது.

இவ் இறுதிப்போட்டி 40 பந்து பரிமாற்றங்களை கொண்ட போட்டியாக அமைந்துள்ளது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி. சி.சிஅணி முதலில்களத்தடுப்பைதீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சி.சி. அணி 37.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 177 ஓட்டங்களை பெற்றது.

அசோக்-25, சுரேசன்-22, சிவராஜ்-27, பிருந்தாவன்-40, பிரபாவன்-18 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் கே.சி.சி.சியை சார்ந்த சிலோஜன்-03, ராகுலன்-01, சத்யன், உத்தமன், சாம்பவன் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

178 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய கே.சி.சி.சி.அணி 29 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களை பெற்றது. ஜெயரூபன் 14, பானுஜன்-13, ராகுலன் ஆட்டமிழக்காது 76 , உத்தமன் -23 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் திருநெல்வேலி சி.சி அணியை சார்ந்த பிரபாவன்-03, தர்சிகன் , சிவராஜ், சுரேந்திரன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணிக்கு கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் 2 ஆம் இடத்தை பெற்ற திருநெல்வேலி சி.சி. அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து சிறந்த களத்தடுப்புக்கான வெற்றிக்கிண்ணத்தை கே.சி.சி.சி அணியை சார்ந்த ஜனுதாஸ், சிறந்த பந்து வீச்சாளருக்காக வெற்றிக்கிணத்தை திருநெல்வேலி சி.சி. அணியை சேர்ந்த பிரபாவன். சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான வெற்றிக்கிண்ணத் தையும் சிறந்த வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தையும் கே.சி. சி.சி. அணியை சேர் ந்த ராகுலன் ஆகியோர் பெற்றுக் கொண் டனர். இப்போட்டிக்கு கே.சி. சி.சி. விளையாட்டுக்கழகத்தின் முதலாவது தலைவரும் முன் னைநாள் இலங்கை வங்கி உத்தியோகத்தருமான N. சிவானந்தராஜா பிரதம விருந்தினராகவும் முன்னைய நாள் கே.சி.சி.சி. அணித்தலைவருமான ராஜ பத்ம நாதன் கல ந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். (கு)

## இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்டசுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென் சேவியர் விளையாட்டுக்கழகம் மோதவுள் ளது.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் லீக் அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் சாவற்காடு மகாத்மா அணியை எதிர்த்து நவாலி சென்பீற்றர்ஸ் அணியும் மற்றும் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் அணி யும் மோதவுள்ளது.

➢➢➢

கலை ஒளி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டி கலை ஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கச்சாய் வொலிக்கிங்ஸ் விளையாட்டுக்கழமும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நீர்வேலி காமாட்சி B2 விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிறுப்பிட்டி கலை ஒளி B2 விளையாட்டுக்கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி B2 விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

➢➢➢

பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட் ட போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் செந்தமிழ் A அணியை எதிர்த்து கணேசானந்தா அணியும் காலை 9.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாகதீபம் அணியை எதிர்த்து சென்பிலிப் நேரிஸ் அணி மோதவுள்ளது. (கு)

## இமையாணன் மத்தி வி.கழகம் நடத்திய உதைபந்தாட்ட போட்டி

### கலட்டி அணி வெற்றி



இமையாணன்மத்தியவிளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் சிறி அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலட்டி அணி மோதியது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டி 1-1 என்ற ரீதியில் சமநிலையில் முடிவடைந்தது.

சமநிலை தவிர்ப்புக்கான பனால்டி உதையில் 4-3 என்ற ரீதியில் கலட்டி அணி வெற்றி பெற்றது. (கு)

# இராணுவ முகாமுக்குள் நான் இருந்திருந்தால் சம்பந்தன் உயிருடன் வெளியேறியிருக்க மாட்டார்

## நவசிஹல உறுமய கர்ச்சிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள இராணுவ முகாமுக்குள் பலவந்தமாக நுழைந்த சம்பந்தன் உயிருடன் வெளியேறியதே அதிசயம்தான்.

நான் மாத்திரம் முகாமுக்குள் இருந்திருந்தால் அவர் உயிருடன் வெளியேறி இருக்கமாட்டார் என நவசிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்தார்.

ஆர்.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் என்றாலும் நாட்டின் சட்டங்களை மீறி செயற்பட முடியாது. மிகவும் பழமையான அரசியல்வாதி என்றாலும் முறையாக நடந்து கொள்ளவேண்டும். அதை விடுத்து காட்டுமிராண்டித்தனமாக செயற்படமுடியாதுஎனவும்தெரிவித்தார.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சி அலுவலகத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சம்பந்தன் முழு இலங்கையையும் பிரதிநிதித்துவம் படுத்தும் எதிர்க் கட்சித் தலைவராவார். வடக்குக்கு மாத்திரம் அவர் எதிர்க்கட்சித் தலைவர் இல்லை.

எந்தவொரு இராணுவ முகாமுக குள்ளும் நுழைவதாயின் அதற்கு ஒரு முறை உண்டு. இது இராணுவத்திலிருந்து விலகிய வீரர்களுக்கும் பொருந்தும்.

இராணுவ முகாமுக்குள் பலவந்தமாக சென்ற சம்பந்தன் உயிருடன் வெளியேறியதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எனினும் நான் இராணுவ முகாமுக்குள் இருந்திருந்தால் உயிருடன் வெளியேற விட்டிருக்க மாட்டேன்.

இராணுவ வீரர்கள் நாட்டை பாதுகாக்க உள்ளனர். தனிப்பட்ட நபர்களின் பாதுகாப்புக்காக இராணுவ வீரர்கள் இல்லை. இதனை ஒவ்வொரு அரசியல்வாதியும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியா ஹிந்துஸ்தானி, பாகிஸ்தான் முஸ்லிம் என்றால் நாங்கள் சிங்களவர்கள். நாம் நாட்டில் ஜாதி மதம் பேதமின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த சமயத்தில் எம்முடன் விளையாட வேண்டாம்.

30 ஆயிரம் இராணுவ வீரர்கள் உயிர்த் தியாகம் செய்து மீட்டெடுத்த எமது நாட்டை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு செல்ல சம்பந்தன் அல்ல வேறுயாருக்கும் இடம்கொடுக்க முடியாது.

எம்முடன் கலந்துரையாடி இனப்பிரச்சினைக்கான தீர்வை பெற்றுகொள்ள வேண்டும். அதை விடுத்து காட்டுமிராண்டித்தனமாக செயற்படவந்தால் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம் என தெரிவித்தார். (செ-12)

## ஆணைக்குழு முன் சசி வீரவன்ச ஆஜர்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் நேற்று ஆஜராகியுள்ளார்.

விமல் வீரவன்ச தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணை சம்பந்தமாக வாக்கு மூலம் ஒன்றை பெறுவதற்காக அவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

## தமிழக மீனவர்கள் 21 பேர் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலைமன்னார் தெற்கு பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்தார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் தலை மன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கபட்டுள்ளதோடு, நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கானநடவடிக்கைகளைமேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகம் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் பயணித்த மூன்று படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (செ-12)

## 13-வது சட்டத் திருத்தத்தின்படி இலங்கை பிரச்சினைக்குத் தீர்வு

### தமிழக காங்கிரஸ் தேர்தல் அறிக்கை

(சென்னை)

இலங்கைப் பிரச்சினைக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில்ஏற்படுத்தப்பட்ட 13-வது சட்டத்திருத்தத்தின் படியே தீர்வு காணப்பட வேண்டும் என தமிழக காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

மே மாதம் நடக்கவிருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இணைந்து போட்டியிடும் காங்கிரஸ் கட்சி, இந்தத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வைக்கும் கோரிக்கைகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று அத் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

இந்திய ஆதரவுடன் இலங்கை அரசியல் சாசனத்தில் உருவாக்கப்பட்ட 13 ஆவது சட்டத்திருத்தத்தின் மூலமே அங்குள்ள தமிழ் மக்களுக்கு சம உரிமையும் வாய்ப்பும் கிடைக்கும் என காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை தெரிவிக்கிறது.

மும்மொழிகளைப்பயிற்றுவிக்கும் நவோதயா பள்ளிக்கூடங்களைத் தொடக்க வேண்டும், தனியார் துறையில் இட ஒதுக்கீடுக்கு வலியுறுத்தல், மீனவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல் ஆகியவை குறித்தும் அந்த அறிக்கை பேசுகிறது.

அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச மாத ஊதியமாக 15 ஆயிரம் ரூபாயை நிரணயிப்பது, நாடாளுமன்றம், சட்டமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு, மெட்ரோ ரயில் திட்டத்தை மதுரை, கோவை, திருச்சி நகரங்களுக்கு விரிவுபடுத்துவது ஆகியவற்றையும் தன் தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் முன் வைத்துள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது, ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கென ஒரு இருக்கையை உருவாக்குவது, பூரண மதுவிலக்கு ஆகியவற்றையும் இந்தத் தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் கட்சி குறிப்பிட்டுள்ளது. (செ-12)

## தீர்வுத்திட்ட...

தீர்வுத்திட்ட முன்மொழிபை தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜனிடம் நேரில் கையளித்தார்.

மருதடி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது.


இந் நிகழ்வில் அரசியல் தீர்வுத் திட்டத்தை தயாரித்த நிபுணர்குழுவில் இடம்பெற்றிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பேரவையின் ஏற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த அலன் சத்தியதாஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்மொழிவை பெற்றுக்கொண்ட இந்திய துணைத் தூதுவர் ஆர்.நடராஜன், குறித்த தீர்வுத்திட்ட வரைபு உரிய இடத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று உறுதியளித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்மொழிவு கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவிடம் கையளிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தொடர்ந்து வெளிநாட்டு தூதுவர்களிடமும் இத் தீர்வுத்திட்டம் கையளிக்கப்படவுள்ளதாக தமிழ் மக்கள் பேரவை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ந)

## எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நேற்று சத்தியாக்கிரகப் போராட்டம்



(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எதிராக கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரது அலுவலகத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நவசிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்திர தலைமையில் நேற்று புதன்கிழமை பகல் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிறு கட்சிகள் மற்றும் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன் கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் உள்ள கஜபா படைப்பிரிவின் தலைமையக இராணுவமுகாமுக்குள் அத்து மீறி பிரவேசித்தமையை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நாட்டில் தமிழ் மக்கள் எந்த இடையூறுகளும் இன்றி நிம்மதியாக வாழுகின்றார்கள்.

ஆனால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும், தமிழ் மக்களுக்கு இதுவரை எந்த சுதந்திரமும் கிடைக்கவில்லை எனவும் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் போலிப் பிரச்சாரங்களை மேற்கொள்வதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (செ-12)

## ஜனாதிபதி - முதலமைச்சர் இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் இன்று வியாழக்கிழமை முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக தெரியவருகின்றது.

இவர்கள் இருவருக்கும் இடையில் கடந்த வாரம், இடம்பெற வருந்த சந்திப்பு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்ததால் பிற்போடப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, இவர்கள் இருவரும் கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் செயலகத்தில் இன்று சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

இதன்போது, படையினரால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை மீள ஒப்படைப்பது, மீள்குடியேற்றம் மற்றும் சிவில் நிர்வாகத்தில் படையினரின் தலையீடுகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், வடக்கில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்துக் கூறுவார் எனவும் நம்பப்படுகின்றது. (செ-12)

# கிணற்றினுள்...

சிறுமியைக் காப்பாற்ற அவரின் 15 வயதுடைய தமக்கை தானும் கிணற்றினுள் குதித்து சகோதரியை மீட்டெடுத்து உறவினர்களின் துணையுடன் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார்.

எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி சிறுமி பரிதாபகரமான நிலையில் உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம் ஊர்காவற்றுறை பொலிஸாரின் விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-30)

# சம்பந்தன்...

ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

எதிர்க்கட்சி தலைவர் கிளிநொச்சியில் இருக்கும் இராணுவ முகாமுக்கு சென்றதை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் பூதாகரமாக்கி நாட்டுக்குள் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றனர். அத்துடன் அவர் முகாமுக்குள் அத்துமீறி நுழைந்ததாகவும் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

எதிர்க்கட்சி தலைவர் ஆர்.சம்பந்தன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதும் அது தொடர்பில் கேட்டறிவதும் அவரின் கடமை. அதனடிப்படையிலேயே அந்த மக்களின் காணிகளை பார்ப்பதற்காக முகாமுக்கு சென்றுள்ளார்.

இராணுவ முகாமுக்கு நுழையும் போது நுழைவாயிலில் இருந்த இராணுவவீரர்கள் வாயிலை திறந்து அவருக்கு செல்வதற்கு அனுமதித்துள்ளனர். உள்ளே சென்றதன் பின்னர்தான் கொழும்பில் இருக்கும் தலைமை அலுவலகத்தில் அனுமதி இருக்கின்றதா என கேட்டுள்ளனர். அனுமதி இல்லையென்றதும் அவர் அங்கிருந்து திரும்பிவந்துள்ளார்.

ஆனால் இனவாதிகள் இதனை சிங்கள மக்கள் மத்தியில் பூதாகரமாக்கி நாட்டுக்குள் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அத்துடன் சம்பந்தன் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழையவில்லையென அங்கிருக்கும் கட்டளை தளபதியும் உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன் சம்பந்தன் இராணுவமுகாமுக்குள் சென்றது தவறாக இருந்தால் அவரை முகாமுக்குள் அனுமதித்த இராணுவத்தினரையே ஆரம்பமாக இடைநிறுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.

இவ்வாறான நிலையிலேயே ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் நாட்டில் மீண்டும் இனவாதத்தை பரப்புவதற்காக இந்த விடயத்தை கையிலெடுத்துக்கொண்டுள்ளனர். இனவாதத்தை நாட்டுமக்கள் ஜனவரி 8ஆம் தகதி தோல்வியடையச் செய்தார்கள். அதனை மீண்டும் ஏற்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது.

அத்துடன் எதிர்க்கட்சி தலைவர் சிறுபான்மை இனத்தவர் என்பதால்தான் இந்த விடயத்தை இந்தளவு பெரிதுபடுத்துகின்றனர். அவர் சிங்களவராக இருந்திருந்தால் இது தொடர்பாக இனவாதிகள் வாய் திறந்திருக்க மாட்டார்கள். எனவே இனவாதத்தை பரப்பி நாட்டுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்கு முயற்சிக்கும் இவர்களுக்கு மக்கள் எதிர்காலத்தில் பதிலளிப்பார்கள் என்றார் விக்கிரமபாகு. (செ-12)

# வி.எஸ்.சிவகரன்...

பத்திரிகையின் ஆசிரியருமான வி. எஸ். சிவகரன் நேற்று புதன்கிழமை மதியம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் பிரதான வீதியில் உள்ள அவரது அச்சகத்தில் வைத்து நேற்று பிற்பகல் 2 மணியளவில் கைது நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணிச்செயலாளர் வி.எஸ்.சிவகரன் கைது குறித்து வருகை தந்த பயங்கரவாத விசாரணைப்பிரிவு அதிகாரிகளினால் அத்தாட்சி பத்திரம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. குறித்த பத்திரம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் அவசரகால ஒழுங்குவிதிகள் சட்டத்தின் கீழ் அல்லது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் அத்தாட்சி பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் ஏன் எதற்காக கைது செய்யப்பட்டார் என்ற விடயம் அதில் குறிப்பிடப்படவில்லை. தற்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் வி. எஸ். சிவகரன் வவுனியா பயங்கரவாத விசாரணைப்பிரிவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மேலும் இதுவரை முன்னாள் போராளிகளை கைது செய்த பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு தற்போது அரசியல்வாதிகளையும் பொதுமக்களையும் குறிவைக்க தொடங்கியுள்ளது. இவர்களை எதற்காக கைது செய்கின்றனர் என்ற காரணம் இதுவரை ரி.ஐ.டியினரால் குறிப்பிடப்படவில்லை.

இந்நிலையில் தொடரும் கைதுகளினால் முன்னாள் போராளிகள் மற்றும் பொது மக்களிடையே பெரும் அச்சநிலை தோன்றியுள்ளதுடன் மீண்டும் போர்க்காலத்தில் காணப்பட்டது போன்ற பதற்றமும் மக்களிடையே பரவ ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# முன்னாள் போராளிகள்...

இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைச் சபையின் தீர்மானத்திற்கு அமைவாக, விசாரணைகள் நடத்துவதற்குரிய கலந்துரையாடல்கள் இடம்பெறுகிறது. போர்க்குற்ற விசாரணையை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இனப் பிரச்சினைக்கு தீர்வாக வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்த சுயாட்சியுடன் கூடிய சமஷ்டி முறை அவசியமானது என வடமாகாண சபையில் நிறைவேற்றிய ப்ரேரணை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, நாட்டை பிளவுபடுத்த மாட்டேன் என்று குறிப்பிட்டார். மாகாண சபைகளினால் நிறைவேற்றப்படும் பிரேரணைகள், முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தமிழீழம் தான் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு என்று தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரங்களில் கூறி வருகின்றார்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, தமிழகத் தலைவர்கள் தேர்தலை மாத்திரம் இலக்காகக் கொண்டு செயற்படுவதாகவும் தமிழகத் தேர்தல் பிரசாரங்கள் தொடர்பாக தாக்கங்கள் எதுவும் இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து விளக்கமளித்த ஜனாதிபதி, சூழ்ச்சியான முறையில் மகிந்த ராஜபக்ஷ அணியினர் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிக்கின்றனர். ஆனால், அதற்கு நாடாளுமன்றம் இடமளிக்காது. சாதாரண பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைப்பதாக இருந்தால் அதற்கு 113 ஆசனங்கள் தேவை. ஆனால், 113 ஆசனங்களை எடுக்கக்கூடிய தகுதி அந்த சூழ்ச்சிக்காரர்களுக்கு இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் 96 ஆசனங்கள் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியிடம் 106 ஆசனங்கள் உள்ளன. அவர்கள் ஆட்சி அமைப்பதானால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஆதரவைப்பெற வேண்டும். ஆனால் குறைந்தது 50 ஆசனங்களையாவது அவர்கள் பெற முடியாது. அப்படியானால், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற வேண்டும். ஆனால் அதுவும் முடியாத காரியம். ஜேவிபி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் ஒருபோதும், மகிந்த அணிக்கு ஆதரவு வழங்காது. இந்த நிலையில், சூழ்ச்சியான முறையில் அரசாங்கத்தை அமைக்கும் நடவடிக்கை சாத்தியப்படாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மீது கேள்விகள், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படு கின்றன. நல்லாட்சி அரசாங்கம் என்ன செய்தது என்ற கேள்விகள் நியாயமானவை என்று கூறிய ஜனாதிபதி, மோசடியான அரசாங்கம் ஒன்றை வீழ்த்தி, பதவியேற்ற புதிய அரசாங்கம் ஒன்று பாரிய சவால்களை எதிர்நோக்குவது இயல்பானது என்றும் குறிப்பிட்டார்.

சவால்களுக்கு மத்தியில் அரசாங்கத்தை கொண்டு நடத்துவதற்கான தகுதி, தனக்கும் பிரதமருக்கும் இருப்பதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெற்ற ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

மேலும் வடக்கு கிழக்கில் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் முன்னாள் பேராளிகள் மீதான கைது நடவடிக்கைள் குறித்தும் தாம் விசேட கவனம் எடுத்து நடவடிக்கை எடுப்புதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# வெள்ளைவானில்...

தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறையிடப்போவதாகவும் குடும்பத்தவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை யாழில் தற்போது இவ்வாறான வெள்ளை வான் கடத்தல்களும், பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரது கைதுகளும் அதிகரித்து வரும் நிலையில்,

தமிழ் மக்களிடையே அச்ச நிலை தோன்றியுள்ளது. முதலில் முன்னாள் போராளிகள் வெள்ளை வானில் கடத்தப்பட்டு பின்னர் அவர்கள் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கும் நிலையே தற்போது வடக்கு கிழக்கில் காணப்படுகின்றது. மேலும் கைது செய்யப்படுபவர்கள் மற்றும் கடத்தப்படுபவர்கள் எதற்காக கடத்தப்படுகின்றார்கள் என தெரியாமலே உள்ளது.

அரசாங்கமும் தமிழ் கட்சிகளும் இவை தொடர்பில் வாய் திறக்காமல் உள்ளனர். இந்த நிலையில் முன்னாள் போராளிகள் வடக்கில் வாழ்வதனை அச்சமாக கொண்டு தற்போது வேறு இடங்களுக்கு நகர ஆரம்பித்துள்ளனர். மேலும் முன்னாள போராளிகளை நாளை மறுதினம் முப்பதாம் திகதி கொழும்பிற்கு வருமாறு அழைக்கப்பட்டு உள்ளமை தொடர்பிலும் முன்னாள் போராளிகள் என்ன செய்வதென்று தெரியாது தவிப்பில் உள்ளனர் என் பதும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# நாட்டின்...

சென்றிருந்தார் என குறிப்பிடும் விமர்சனங்கள் குறித்து ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன்

நாட்டை பிரிக்கவோ துண்டாக்கவோ நாம் கோரவில்லை. ஒரே நாட்டுக்குள்ளே அதிகாரத்தை கோருகின்றோம். இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தனி மாகாணம் வேண்டும் என கேட்பது ஒரே நாட்டுக்குள்தான். இதனால் யாரும் அச்சம் கொள்ள வேண்டிய தேவையில்லை.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மொழி பேசுபவர்களே அதிகமாக உள்ளனர். எனவே அவர்களுக்கான அதிகாரத்தை அவர்களுக்கே வழங்க வேண்டும். இதேபோன்றே தெற்கில் சிங்களவர்கள் அதிகம் என்பதால் அவர்களுக்கான அதிகாரத்தை அவர்களிடம் வழங்க வேண்டும். இது தொடர்பில் அனைவரும் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

நாட்டை பிரிக்க வேண்டும் என யாரும் கோரவில்லை. எல்லோரும் இலங்கையர்களே. நாட்டை யாரும் பிரிக்க முடியாது.

கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றுக்காக சென்றிருந்தேன். கலந்துரையாடல் முடிவின் போது சிலர் என்னிடம் வந்து, எமது இடத்தின் ஒரு பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. இதனை நேரடியாக சென்று பாருங்கள் என்றனர்.

இதனையடுத்து நான் இராணுவ முகாமுக்குள் சென்றேன். என்னை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. நானும் பலவந்தமாக செல்லவில்லை. அங்கு ஒரு பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆன்ால் நான் அங்கு சென்று பார்த்தேன். மக்கள் கூறியது போல அவர்களின் இடம் சூறையாடப்பட்டிருந்தது. நான் ஒன்றும் கூறவில்லை. இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்திடம் கதைக்கின்றேன் எனக்கூறி அங்கிருந்து வெளியேறிவிட்டேன். அங்கு இரண்டு மூன்று இராணுவ வீரர்கள் இருந்தனர்.

நான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் போது இவ்வாறு சென்று அவதானிப்பது வழமை. இதேபோன்று கடந்த காலப்பகுதியில் வலிகாமத்துக்கும் சென்று பார்த்து வந்தேன். அங்கு இராணுவத்தினரும் இருக்கவில்லை. மக்களும் இருக்கவில்லை. இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிவித்து பொது மக்கள் பாவனைக்கு இடத்தை பெற்றுகொடுத்தேன்.

நான் நேரில் சென்று அவதானிப்பது எனது உரிமை. நான் பலவந்தமாக செல்லவில்லை. நான் வாகனத்தில் ஏறி வரும்போது இராணுவ அதிகாரி ஒருவர் தொலைபேசி மூலம், சேர் நீங்கள் வருவீர்கள் என்று முன்னதாகவே அறிவித்து இருந்தால் நான் அதற்கென ஒருவரை ஏற்பாடு செய்து எல்லாவற்றையும் காண்பித்து இருப்பேன் என்றார். ஆனால் நான் அங்கு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் போகவில்லை.

நாட்டைப் பிளவுபடுத்தும் நபர்களே இவ்வாறான கதைகளை கூறுகின்றனர். நான் பலவந்தமாக செல்லும் மனிதன் அல்ல. நாட்டை துண்டாடச் செய்ய எத்தனிக்கும் உதய கம்மன்பிலவே இதனை முதலில் கூறியிருந்தார். அந்த மனிதரின் முகத்தை கூட பார்க்க எனக்கு விருப்பமில்லை. இதுதொடர்பில் எவருக்காவது விளக்கம் வேண்டும் என்றால் நேரடியாக என்னிடம் வந்து கதைக்க சொல்லுங்கள். அதைவிடுத்து பொய் கூற வேண்டாம் என சம்பந்தன் தெரிவித்துள்ளார். (செ-12)

# சூறாவளிக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் சூறாவளி ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் தற்போது நிலவி வரும் காலநிலையின் அடிப்படையில் இவ்வாறு பலத்த காற்று வீசக்கூடிய அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை கம்பஹா மாவட்டத்தின் சில பகுதிகளில் இடி மின்னலுடன் கடும் காற்று வீசியது. இதனால் அங்கு பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காயங்களுக்குள்ளாகினர்.

இதன்படி கடுமையான காற்றுடன் கூடிய காலநிலை சூறாவளி காற்றாக மாற்றமடையக் கூடிய அபாயம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் உயர் அதிகாரி தர்சன சமில் பிரேமதிலக்க தெரிவித்துள்ளார். மேகங்களுடன் மேலே அல்லது கீழே இந்தக் காற்று பலமாக வீசக்கூடுமென எச்சரிக்கை விடுத்துள்ளார். மழை பெய்வதற்கு முன்னதாக கடுமையான குளிர் ஏற்படலாம், பத்து நிமிடங்கள் வரையில் பலத்த காற்று வீசலாம்.இந்த வகை மேகங்கள் காணப்படும் 3 முதல் 4 கிலோ மீற்றர் தூரத்திற்கு மட்டும் சூறாவளி ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

சூறாவளி காற்று தொடர்பில் முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்க முடியாது என்றபோதிலும் இடி மற்றும் கடும் மழை பற்றிய எதிர்வு கூறல்கள் வெளியிடப்படும் பகுதிகளில் அவதானமாக இருப்பதன் மூலம் திடீரென ஏற்படக்கூடிய சூறாவளித் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (செ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.